www.tamilarangam.net

# தூண்டில்



Tamilische Zeitschrift des Süda ... s

46

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கு போவோம் ?

இராணுவம் புகுந்து எந்நேரமும் சுட்டுக் கொல்லலாம்.கைது செய்யலாம்.கடத்திக் கொண்டும் போகலாம்.உயிராபத்தான நிலையிலும் வைத்திய வசதி இல்லை.ஒரு வேளை வயிற்றுக்குப் போடவும் உணவு இல்லை.பிள்ளைகளுக்குப் பால் மா இல்லை.உயிரைக் குடிக்கும் தொற்று நோய்கள் ஒருபுறம். மனிதரைப் பதம் பார்க்கும் விசர் நாய்கள்,பாம்புகள் மறுபுறம்.கூரையில்லாததால் நனைத்து நடுங்க வைக்கும் மழை.இதுதான் இலங்கையிலுள்ள அகதிகளினதும்,அகதி முகாம்களினதும் நிலைமை.இந்த முகாம்களில்தான் 1 இலட்சத்திற்கும் அதிகமான அகதிகள்சொந்த நாட்டிலேயே உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்கிறார்கள்.

முகாமை விட்டு வெளியே சுதந்திரமாகப் போக முடியாது.தீவிரவாதி என்ற பெயரில் எந் நேரமும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படலாம்.ஒழுங்கான உணவு இல்லை. அரைக் கூலிக்கும்,காற்கூலிக்குமாக வேலை செய்து வயிற்றுப்பாட்டையும் பார்த்து,குழந்தைகளையும் கவனிக்க வேண்டிய நிலைமை. ஏமாற்றிவிட்டு உடல் உறுப்புகளை அறுத்தெடுத்து வியாபாரம் செய்யும் பயங்கரம்.பால் மாவும்,அஸ்பிறினும் கொடுத்தால் இலங்கைப் பெண்ணை படுக்கைக்கு அழைக்கலாம் என்ற கேவலமான பிரச்சாரம்.இதுதான் இந்தியாவில் அகதி முகாம்களில் வாழும் 3 இலட்சத்திற்கும் மேலான ஈழ அகதிகளின் அவலமான நிலைமை.தப்பி வரும் வழியிலேயே பலரைப் பறிகொடுத்து ,தஞ்சம் கேட்டு கண்ணீருடன் வந்த அகதிகளை தங்களின் நாறிப்போன அரசியலுக்காக,தமிழ் மக்களை அழித்தொழிக்க கங்கணம் கட்டியிருக்கும் இலங்கையரசிடம் பலிகொடுக்கத் துடிக்கும் இந்திய அரசியல்வாதிகள்.

பணத்தை ஏப்பம் விடும் ஏஜென்சிகள்.முன் பின் தெரிந்திராத நாடுகளூடாக அச்சுறுத்தலான பயணங்கள்.இடைவழியிலேயே அந்தந்த நாடுகளால் பிடிக்கப்பட்டு மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படும் ஆபத்து .எல்லைகள் தாண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம்போது காணாமற் போன பலர்.
த்தனையம் தாண்டி மேற்கு ஐரோ
ாவுக்கு வந்து தஞ்சம் கோரும்
கதிகளை சட்டங்களாலும்,கெடு
டிகளாலும் நெருக்கித் தள்ளும்
மற்கைரோப்பிய அரசுகள்.அகதி
ளை விரட்டு,துரத்தியடி என்பதே
ன்று மேற்கைரோப்பா எங்கும்
வலாகிக் கொண்டிருக்கும்
ோஷம்.மனிதாபிமான முகமூடி
ாட்டுள்ள இந்நாடுகளின் சாயம்
கதிகளின் விஷயத்தில் வெளுத்
க் கொண்டிருக்கிறது.

பிரான்ஸ் நாட்டுக்குத் தஞ்சம்
ாரிவந்த 3 ஈழப் பெண்களை
மான நிலையத்திலேயே பலநாட்
அடைத்துவைத்த அரசு அவர்
ின் அரசியல் தஞ்சம் நிராகரிக்
பட்டு விட்டதாகக் கூறி பொலி
ம ஏவி பலாத்காரமாக அவர்
ள நாடு கடத்த முயற்சித்தது.
ிம்பிப்போனால் தங்கள் உயிரு
ஆபத்து என்று அந்தப் பெண்
அழுது குளறியும் மனமிரங்
த பொலிஸ் அவர்களுக்கு வில
மாட்டி.விமானத்தின் இருக்
ளுடன் பெல்ட்டுகளால் அவர்க
க் கட்டிப்போட்டது.இந்த நிலை
யில் விமானம் புறப்படமுடியாது
அவ் விமானத்தில் பயணம்
ப்ய இருந்த சக பிரயாணிகளும்,
மான ஓட்டிகளும் ஒரே குரலில்
ால்லவே,வேறு வழியின்றி அம்
று பெண்களையும் விமானத்தி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லிருந்து இறக்கிய பொலிஸ் அவர்களை மீண்டும் விமான நிலையத்திலேயே அடைத்து வைத்தது.(இப்படங்களைப் பிரசுரித்த பிரெஞ்சுப் பத்திரிகையே பொலிஸாரின் கண்களையும் மறைத்துள்ளது).

அரசியல் தஞ்சம் கோரிய ஈழ தமிழர் ஒருவரின் விண்ணப்பத்தை நிராகரித்த பிரெஞ்சு அரசு பொலிஸை ஏவி அத் தமிழரை நாடு கடத்தியது.இதன்போது, இலங்கையில் தன்னை எதிர்கொள்ள இருக்கும் மரணம் பற்றிய பயத்தினால் அத் தமிழர் விமானத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார்.

இதே போல் கொலண்டில் நாடு கடத்தப்படும் அபாயத்தினால் இரு ஈழத் தமிழர்கள் றெயிலின் முன் பாய்ந்தும்,தூக்கு மாட்டியும் தஞ்சம் கோரிய நாட்டிலேயே தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்கள்.

சென்ற மாத நடுப்பகுதியில் கிழக்கு ஜேர்மனிப் பகுதியில் அகதிகள் தங்கியிருந்த கட்டிடத்தைச் சுற்றிவளைத்த 300க்கு மேற்பட்ட புதிய நாஸிகள் அக் கட்டித்திற்குத் தீ வைத்தனர்.சொந்த நாட்டில் உயிராபத்து என்று ஜேர்மனியில் தஞ்சம் கோரிய கானா நாட்டு அகதி ஒருவர் நாஸிகளினி் தீயினால் வெந்து சாம்பலானார்.அதே கட்டிடத்தில் தங்கியிருந்த 25க்கும் மேற்பட்ட ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த அகதிகள் உயிராபத்தான எரிகாயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதே நேரத்தில் அடுத்த நகரத்தில் வியட்நாமிய அகதிகள் இன்னொரு புதிய நாஸிக் குழுவினால் ஆயுதங்கள் மூலம் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இக் கதி இங்குள்ள ஈழத் தமிழர்களுக்கும் விரைவில் நேரப் போகிறது என்பதில் ஐயமில்லை.

இத் தாக்குதல்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கையில், மறுபுறத்தில் ஜேர்மனியின் அடிப்படைச் சட்டத்திலிருந்து அரசியல் தஞ்சத்தை முற்றாக நீக்குவதா? அகதிகள் இங்கு வருவதைத் தடுக்கும் வகையிலும்,இங்குள்ள அகதிகளை விரட்டும் வகையிலும் அரசியல் தஞ்சச் சட்டத்தை மாற்றுவதா? என்ற உடன்பாட்டுக்கு வருவதற்காக அனைத்துக் கட்சி மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருக்கின்றன.

தாங்கள் உற்பத்தி செய்யும் அழிவு ஆயுதங்களுக்கு நல்ல விற்பனைச் சந்தையை உருவாக்கி வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள மூன்றாம் உலக நாடுகளில் பயங்கரவாதத்தைத் தூண்டி,அதற்கு எண்ணெய் ஊற்றி எரிய வைத்துவரும் மேற்கைரோப்பிய நாடுகள் ஒருபுறம் தமது "அரசியல் தஞ்சச் சட்டங்களின்படி"உயிரைக் காத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளத் தஞ்சம் கேட்டவர்களை பலிக்களங்களுக்குப் பலாத்காரமாகத் தள்ளிவிட்டுக்கொண்டிருக்கின்றன.

மறுபுறம், தமது பிரச்சார சாதனங்கள் மூலம் தாங்கள் அதிகாரம் செலுத்தும் நாடுகளிலுள்ள வேலையில்லாப் பிரச்சினை, வீடில்லாப் பிரச்சினை அனைத்திற்கும் காரணம் மூன்றாம் உலக நாட்டு அகதிகளே என்று தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்வதன் மூலம் இந் நாட்டு மக்களின் கோபத்தை அகதிகள் மீது திசை திருப்பி, இதன் மூலம் அதிகரித்து வரும் நிறவெறி, வெளிநாட்டவருக்கு எதிரான விரோதம் போன்றவற்றால் அகதிகளை உளவியல் ரீதியாகக் கொலை செய்து வருகின்றன.

மேற்கைரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, கனடா நாடுகளிலும் பரந்துள்ள அகதிகளின் நிலை "தாச்சிக்குள்ளிருந்து நெருப்புக்குள் விழுந்த கதை"யாகிவிட்டது. தங்களின் தாய்நாடுகளில் தாங்கள் எதிர்கொண்ட மரண ஆபத்தையே தஞ்சம் கோரியுள்ள நாடுகளிலும் எதிர்கொள்ளவேண்டிய நிலை உருவாகிவிட்டது.

எங்கு போவோம்?எப்படித் தப்புவோம்??உலகின் அனைத்துப் பரப்பிலும் இதுதான் நிலைமையென்றால் தப்புவதெங்கே???

எங்கு ஓடினாலும் துரத்தும் ஆபத்திலிருந்து தப்ப முடியாது என்று நிரூபணமானபின் நாம் இந்த ஆபத்தைத் துரத்துவதைத்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிர வேறு வழியில்லை.அதிகாரத்திலுள்ளவர்களால் அனைவரும் பொதுவாக எதிர்நோக்கும் அபாயத்தை முற்றாக அழிப்பதன் மூலமே எமக்கான நிரந்தர அமைதியான வாழ்வு அமைய முடியும்.எங்களின் ஓட்டத்தையும்,எங்களைத் துரத்துபவற்றையும் நிறுத்த நாம் கொல்லப்படுவதற்கு முன்னமே தயாராவோமா?

* பாரதி

---

# புதிய இராகம்

*ஆங்காங்கே*
*புதைகுழிகள்.*

*உண்மையும்,*
*நேர்மையும்*
*அவற்றில்*
*புதைக்கப்பட்டிருக்கின்றன.*

*ஓடி வாருங்கள்.*
*அற்றைத் தோண்டி*
*நல்லதோர் வீணை செய்வோம்.*

*

*பி.ஆர்.ரஞ்சனி*

## *யார் கவனிப்பார் ???*

தமிழ் நாட்டில் வாழ்கின்ற அனைத்து இலங்கைத் தமிழர்களும் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆணையின் கீழ் தாயகம் திரும்பி கடந்த 20 வருடங்களுக்கு மேலாகத் தமிழகத்தில் வசித்து வரும் இந்தியர்களும் தகுந்த அத்தாட்சி காட்டப்படவேண்டுமெனத் துன்புறுத்தப்படுகின்றனர்.

கொடைக்கானலில் தங்களைப் பதிவு செய்துகொள்ள மறுத்தவர்கள் பொலிஸாரினால் தாக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தாயகம் திரும்பியோருக்கு எதிராக அராஜகமும்,அடக்குமுறையும் பயங்கரமாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இதற்கென்றே தோட்ட முதலாளிகளால் நீலகிரிக்கு கொண்டுவரப்பட்ட லீனா நாயர் என்ற மாவட்டக் கலெக்ரரின் கட்டளையின்படி 200பேர் கைது செய்யப்பட்டு ஒரு வாரத்திற்கும் மேலாக உதகமண்டலம் அண்ணா கலையரங்கத்தில் கடுங்குளிரில்,யாரோடும் தொடர்பு கொள்ளவிடாமல் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

*-மலையக மக்கள் மறுவாழ்வுமன்றம்*

www.tamilarangam.net

# வியர்வைக் காலமும்,
# வெற்றுத் தோட்டாக்களும்.

துப்பாக்கிகளின் பிடியில் முளைத்து நிற்கிறது ஓர் உருவம்

"நான் மக்கள்"
நான்,
உண்மையைப் பேசிக்கொண்டிருக்கிறேன்.
போராட்டத்தைக் கடுமையாய் விமர்சித்துக்கொண்டிருக்கிறேன்.
மனிதப் படுகொலைகளுக்கெதிராய் எரிந்துகொண்டிருக்கிறேன்.
படைப்புகளை வெளியிட்டுக்கொண்டிருக்கிறேன்.
போர்முனையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறேன்.

இப்போது
என்னைத் தெரிந்தாகிவிட்டது
உனக்கு,
நான் துரோகியென்று.

நான்,
வழமையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
உன்னால்
மிரட்டப்படாலாமென்று
கடத்திச் செல்லப்படலாமென்று
உடைத்து நொறுக்கப்படாலாமென்று
துடைத்தெறியப்படலாமென்று
ம்!
நான் உஷாராய் இருக்கின்றேன்.
ஓர் புதிய பாடலைப் பாடிக்கொண்டிருக்கிறேன்.
பழைய வீதிகளிலும்
பழஞ் சுவர்களிலும்
தானம் தட்டியவாறு கூடவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் மக்கள்"
"நானோர் இயக்கம்"
"நானோர் இயக்கம்"

வா,
மீண்டும் மீண்டும் பாய்ந்து வா.
உன்னால் உணர்ந்துகொள்ள முடியும்
கடலின் வாயை மௌனமாக்கிவிட முடியாதென்பதை.

* ஸ்ரீவதரன்

---

## சாவு வியாபாரிகள்

1983ஆம் ஆண்டுக்குப் பின் மூன்றாம் உலக நாடுகளுக்கான ஆயுத விற்பனையில் அமெரிக்கா மீண்டும் 1ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. 1990 இலிருந்து 45 வீதமான ஆயுதச் சந்தையை அமெரிக்காவே வைத்துள்ளது. சென்ற வருடத்திலிருந்து அமெரிக்காவின் ஆயுத விற்பனை இரட்டிப்பாகியுள்ளது. 1989ஆம் ஆண்டு 8 மில்லியன் டொலர் களாக இருந்த ஆயுத விற்பனை சென்ற வருடம் 18.5 மில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது. மூன்றாம் உலகநாடுகளுக்கான ஆயுத விற்பனையில் 2 வருடங்களுக்கு முன் 38.5 வீத மான சந்தை சோவியத் யூனியனிடமிருந்தது. சென்ற வருடம் இது 29.2 வீதமாக குறைந்துள்ளது.

இந்த இரு நாடுகளையும் விட மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுத விற்பனை செய்யும் ஏனைய பிரதான நாடுகள் ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி என்பன.

1983-1990வரையான காலப் பகுதியில் சுமார் 300 மில்லியன் டொச் மார்க்குகளுக்கு ஆயுதங்கள் மூன்றாம் உலகநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கொலைகாரர்கள்தான் இன்று ஏனைய நாடுகளின் பிரச்சினையைத் தீர்க்க வருகிறார்களாம்! மூன்றாம் உலக நாடுகளைச் சவக் காடாக்கும் இவர்களுக்கான சவக் கிடங்குகள் வெட்டப்படாமலா இருக்கும்?!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து ஓர் துண்டுப்பிரசுரம்: 2

# தொடரும் கடத்தல்கள்...

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட 10 பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்கு முன் மீண்டும் 4 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30ஆம் திகதியன்று யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த த.செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்டப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.

கவிஞரும், பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமயந்தி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுபவர்) கலைப்பீட 3ஆம் வருட மாணவியாவார். "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினருமாவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கெனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திராணகமவினால் ஸ்தாபிக்கப்பட்ட "பூரணி" பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப் பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் "விழுங்கப்பட்டது" தெரிந்ததே.

செல்வி, புளொட்டின் உட்கட்சி ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் பெண்கள் அமைப்பிலிருந்து ஒதுங்கினார். "தோழி" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புனொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

30ஆம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணி நேரத்தில் "விசாரித்துவிட்டு" விடுவதாகக்கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்ப முடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும், நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி, பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மகாநாட்டிற்கு மறைந்த பெண் ணிலைவாதியும், கவிஞருமான சிவரமணியுடன் சென்று கலந்துகொண்டவர். ஆனால் புலிகளோ, தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்புகொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின் "அலுவலகங்களில்" இக் கடத்தல் குறித்து விசாரித்தபோது "உயிருக்கு ஆபத்தில்லை" என்று மட்டும் கூறினர்.

வணிகபீட மாணவரான மனோகரனையோ, ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் இதுவரை புலிகளால் அறிவிக்கப்படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக்கழக மாணவர்களான கோவிந்தன், ஸ்ரீநிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் புலிகள் யாழ் பல்கலைக் கழகத்தில் நடாத்திய "கொள்கை" (கொலை) விளக்கக் கூட்டத்தின் முடிவில், அவர்களை மன்னித்து விட முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத்தக்கது. (இது பற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனனாயக விரோத பாஸிஸத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறை சார்ந்த புத்திசீவிகளையும், சனனாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், கரடிகளுக்கும் தான் சொந்தம் என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதைமேட்டின் மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?

உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக் கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப் புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப் போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதல செய் என முழங்குவோம். புலிகளின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவருடையதும் உரிமை மட்டுமல்ல, கடமையும் கூட இது.

\- நண்பர்கள் (ஈழம்)

---



எந் நேரத்திலும் கொல்லப்படக் கூடிய சூழலிலிருந்து வரும் இப் பிரசரத்தை இயன்றவரை பரவச் செய்யுங்கள்.

---

ஈழத்திலிருந்து வந்த இவ்வாக்கத்தையும், இதைப் போலவே வரும் ஏனையவற்றையும் போட்டோப் பிரதி செய்து துண்டுப் பிரசுர வடிவில் உங்கள் நண்பர்கள் மத்தியில் விநியோகிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

\- கடலோடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

கொஞ்சக் காலத்திற்கு முன் இலங்கை வாசகர் ஒருவர் "விவாதங்களை முழுமையாக அனுமதியுங்கள். மண்டையைப் பிழிந்து கசக்கித் தேடுங்கள். நாங்கள் கொடுத்த விலை அதிகம்!" என்று ஐரோப்பிய நிலைமை தெரியாமல் எழுதப்போக தூண்டிலும் உணர்ச்சி வசப்பட்டு (இது வேறை உணர்ச்சி) பின் அட்டையில் அதைத் தூக்கிப் போட்ட பிறகு நானும் "எல்லாருக்கும் நல்லகாலம் பிறக்கப் போகுது" என்று களிபேருவகையால் கற்பனா லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த காலையில் என்னை அந்த உலகத்திலிருந்து உதைத்துத் தள்ளி மீண்டும் பாவம் செய்தவர்கள் மட்டுமே வசிக்கத் தகுந்த இந்தக் குறுகிய பூமியில் தள்ளியதற்கு நீங்கள் எல்லோரும் நாசமாய்ப் போக!

எனது கடிதத்தில் கூட நீங்கள் 'உவ்வளவு' ஆத்திரப்படும்படியாக நான் ஒன்றும் பெரிதாகச் சொல்லி விடவில்லை. அல்லது இதுவரைக்கும் யாரும் சொல்லாததை நான் புதிதாகச் சொல்லிவிடவுமில்லை. உழைப்பிற்கும் முலதனத்தின் ஆதிக்கத்திற்குமிடையிலான போராட்டத்தில் மனிதர்கள் கொல்லப்படுவது சந்தோசத்திற்குரியதா? இல்லை என்பது எனது வாதம். அவ்வளவு தான் நான் எழுதியது. ஆனால் பாரிஸிலும், பாரிஸிற்கு விடுமுறைக்காக வந்த தோழர்களிற் பலரும் அதைச் சந்தோசத்திற்கு மேல் சந்தோசமாக பேய்ச் சந்தோசமாகக் கொண்டாடும் மனநிலையில் அப்போது இருந்தார்கள். இப்போது எப்படியோ கடவுள்தான் அறிவார்.

தமிழ் மார்க்சிஸ லெனினிஸத்தில் பேராற்றல் உள்ளவர்கள் "கொல் அல்லது கொல்லப்படு" என ஒரே கொலைச் சிந்தனையைத் தவிர புதிதாக என்னவாலும் சொல்கிறார்களா? நானும் திண்ணைத் தியானத்திலமர்ந்து கண்ணுக்கு நல்லெண்ணைக்குப் பதில் சூரியகாந்தி எண்ணை விட்டுத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

ஆகக் கடைசி உரிமையான மனிதர்களுக்கான வாழும் உரிமையை (இல்லையென) மறுப்பவர்களை மறுக்கும் மனிதர்கள் ஈரோ

www.tamilarangam.net

ப்பாவில் இருக்கிறார்களா? ஏன் இல்லை. பனிமலரில் அனந்தன் இருக்கிறார். "விடுதலைப் புலிகள் ராஜீவ் கொலைக்குத் தாம் பொறுப்பில்லை என மறுத்துள்ளனர். வேறு யாராவது செய்திருக்கலாம் என்றவாறு ஊகங்கள் சில அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் இக் கொலை பற்றி வருத்தம் தெரிவிக்கத் தவறியமை அவர்கள் மீதான சந்தேகத்தை அதிகமாக்கியுள்ளது. அதைவிட முக்கியமாக இத்தகைய அநாகரிக அரசியலை, காட்டுமிராண்டித்தனத்தை விடுதலைப் புலிகள் கண்டிக்க மறுப்பது அவர்களது அரசியல் எவ்வளவு தூரம் இழிந்துபோய்விட்டது என்பதையே காட்டுகிறது. மனிதத் தன்மையற்ற ஒரு தலைமையால் ஒரு விடுதலை இயக்கத்தைச் சரியாக வழிநடத்த முடியாது. அரசியற் பிரச்சினைகளைத் தனிமனித பயங்கரவாதம் மூலம் தீர்க்கலாம் என்ற கருத்தை விடுதலைப் புலிகளின் தலைமை நிராகரிக்க வேண்டும். ராஜீவ், ரஞ்சன் விஜேரத்தினா போன்றோரது கொலைகளை அவர்கள் தயங்காது கண்டிக்க வேண்டும். தம் அரசியல் எதிரிகளது கொலைகளை அவர்கள் நிறுத்த வேண்டும்" (இந்திரா இறந்தார் கொல்லுங்கள் சீக்கியரை;

ராஜீவ் போனார் விரட்டுங்கள் அகதிகளை - அனந்தன். பனிமலர். யூலை'91)

நிலைமை இப்படித்தான் இருக்கும்போது, பகத்சிங் இளைஞர் முன்னணி அமைத்துக்கொண்டிருக்கும் புதிய ஜனநாயகம், பகத்சிங் கொலை குறித்து என்ன சொன்னார் என்பதை மறந்து எழுதியதை வாசித்தபோது எனக்குச் சிரிப்பு வந்ததைத் தவிர அதை உங்களுக்கே எழுதியதைத் தவிர நான் யாதேனும் பாவம் செய்தேனா? அதுக்காக என்னைப் போட்டு உப்பிடி அறுப்பதில் உங்களுக்கு என்ன தான் சந்தோசமோ தெரியவில்லை. பகத்சிங் சொல்வதைக் கேளுங்கள்!

"ஒரு மனிதனைக் கொல்வதில் நாங்கள் மகிழ்ச்சியடையவில்லை. அதற்காக வருந்தவே செய்கிறோம். ஆனால் அராஜக அடக்குமுறைகளை எதிர்த்து நடக்கும் புரட்சியின் ஒரு பகுதியாக, இந்தச் செயல் தவிர்க்க முடியாதது. புரட்சியின் உதயத்திற்கு இரத்தம் சிந்துதல் புறக்கணிக்கவே முடியாதது. எங்களுடைய இலட்சியம் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமையை ஒழித்திடப் புரட்சி செய்வதேயாகும். இன்குலாப் ஜிந்தாபாத்" (பகத்சிங் வீரவரலாறு-அறந்தை நாராயணன். எங்கும் கிடைக்கும்)

பகத்சிங்கை மேற்கோள் காட்டி எனது பக்கத்தை நியாயப்படுத்துகிறேனா? இல்லை. அந்த ஆள் மிகத் தெளிவாகச் சொல்கிறார் - ஒரு மனிதனைக் கொல்வதில் நாங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகிழ்ச்சி அடையவில்லை. அதற்காக வருந்தவே செய்கிறோம் - என்று. ஆனால் புதிய ஜனநாயகமும், தூண்டிலுக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதியவர்களுமான இந்த "மக்களைப் பெற்ற மகாராசர்கள்" சொல்கிறார்கள் அசாம், மக்கள், பஞ்சாப் மக்கள், ஈழ மக்கள் கவலைப்படப் போவதில்லையென.

காட்டுமிராண்டித்தனத்தை, தனிநபர் பயங்கரவாதத்தை கண்டிப்பவர்களைச் செத்துக்காட்டச் சொல்லிக் கேட்பதுதான் மிகப் பெரிய நகைச்சுவை.

முதலில் சஞ்சிகை நடத்துபவர்களும், இனி நடத்த விரும்பி இருப்பவர்களும் தங்களுக்குரிய சமூகப் பொறுப்பை உணரவேண்டும்.

எல்லாவிதமான வார்த்தைச் சொற்சிலம்பங்களையும் நீக்கிவிட்டுப் பார்ப்போமாயின், அசாம், பஞ்சாப், ஈழமக்களின் பேரால் அதிகார வர்க்கம் நடாத்திய கொலைகள், அதில் பலி எடுக்கப்பட்ட மக்களின் இறுதிச் செய்தி எமக்குச் சொல்வதுதான் என்ன?

உறிஞ்சும் இந்தச் சுரண்டல் அமைப்பை உடைத்துத் தூளாக்கு!

ஒரு கொலைக்குப் பதில் இன்னொரு கொலையைச் சமப்படுத்தி நெறுக்க வெளிக்கிடாதே!

எந்தப் பழிவாங்கல்களின் பேராலும் எந்தக் கொடுங்கோலனின் மரணங்களின் பேராலும் இந்த மக்களின் அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வாழ்க்கையையும், அவர்களின் போராட்டங்களையும் மட்டுப்படுத்தவும், திசை திருப்பவும் முனைவோர் குறித்து எச்சரிக்கையாய் இரு!.

இப்பவும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. கொலைகள் குறித்துச் சந்தோசப்படுவதற்குப் பதில் வருத்தப்பட எங்கள் மனதைப் பக்குவப்படுத்தலாம். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தோராகிய எங்களுக்கு தற்போதைய சூழ்நிலையில் இது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. இது குறித்துச் சிந்திக்கத் தவறுவோமாயின் நாம் சொல்லவரும் சேதி - நாம் E. P.R.L.Fவோ அல்லது மற்ற இயக்கங்களோ அல்ல என்பதை மட்டுந்தான். இதற்குமேலும் தூண்டில் தான் எழுதியதை வர்க்கப் பார்வை என நியாயப்படுத்துமாயின், மேற்கோள்கள் மலிந்த இந்தத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் மேற்கோள்களுக்கா பஞ்சம்! நானும் எனக்கு வசதியாக அவசரத் தேவைக்கு லெனினது மேற்கோள்களில் ஒன்றை உபயோகிக்க வேண்டிவரும்.

"வர்க்க மதிப்பீடுகள் அவசியம் தான். ஆனாலும் மானிட மதிப்பீடு

www.tamilarangam.net

கள் அதைவிட உயர்ந்தவையாகும்" - வி.இ. லெனின். (மேற்கோள்கள் இல்லாத உலகம் எது?)

எல்லாம் சரி! ராஜீவ், ரஞ்சன் இடத்திற்கு புதியவர்கள் வந்திருக் கிறார்களே! மலையப்பர் போய் சோலையப்பர் வந்திருக்கிறாரே! (ஏழாவது மனிதன் படம் பார்- பாடம் படி). அவர்களை என்ன செய்வதாம்?

புரட்சிக்கட்சி அல்லது வெகுஜன இயக்கம் முலதனத்தின் ஆதிக்கத் திலிருந்து மனிதனை விடுவிக்கும் போராட்டத்தில் வெற்றி பெறுமா யின், இந்த மலையப்பர்கள், சோலையப்பர்கள் தட்டித் தவறி உயிர் தப்ப வாய்ப்பிருக்குமாயின் (தற்போதைய நிலையில் இந்த வாய்ப்பு இல்லை. ஏனெனில் ஆயு தங்கள் மிகவும் மலிவு.) இந்த மனிதப் பிறவிகளின் வாழும் உரிமை பாதுகாக்கப்படுவதோடு, இவர்களின் அடிப்படை உரிமை களான பேச்சு, எழுத்து, சிந்த னைச் சுதந்திரங்கள் பேணப்படவும் வேண்டும்.

- சுகன்

*   *   *

நாட்டின்றை நிலைமை இவ்வ ளவு மோசமானதாகிப் போனபிற கும், விடயங்களை விவாதிப்பதில் காட்டும் அக்கறையை நையாண்டி செய்வதாகச் சொல்லி ஆத்திரப்பட் டார்கள் பிரஜைகள். இப்போது நண்பர் சுகனின் அபிப்பிராயம் உங் களையும் மிகவும் ஆத்திரப்பட வைத்திருக்கிறது என்பதைப் பதிலி னூடாக உணரமுடிகிறது. செத்துக் காட்டட்டும், சாவு எப்படியான தென்று என புதுமையான விளக்க மொன்றும் எல்லையில் நின்று கொண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அபிப்பிராயங்களில் சிக்கல் விழும்போது உண்மையான பதிலை மறைத்து சமுகம் சம்பந்தமான அக்கறை தங்களுக்கு மட்டுந்தான் இருப்பதுபோல நியாயப்படுத்த முனைகின்ற தாற்பரியங்கள் எல் லோருக்குமே இருக்கின்றன. என் றாலும் அரசியல் பற்றிய புரட்சி கரப் புரிதல்களுடனும், கடந்தகால அனுபவங்களுடனும் ஒரு புதிய வழிக்கான தேடல்களில் முனைந்து நிற்கின்றீர்கள் என்ற நம்பிக்கை யின் எச்சசொச்சங்களுடன் நாமும் தொடர்ந்து வருகின்றோம்.

தனிநபர் கொலைகளின், கொள் கைகளின் ஊற்றாய் வளர்ந்து இன்று விருட்சமாகி நிற்பதுதான் நமது ஈழப் போராட்டம். மக்களி லிருந்து அந்நியப்பட்டு எழுந்த ஆயுதங்கள்: அவர்களின் அவரச, அவசியமற்ற ஒரு கோஷத்தின் அடிப்படையில் எழுந்த ஆயுதங்கள் சாதிக்கக் கூடியவை இந்தத் தனி நபர் கொலைகள்தான் என்றால், அவைதான் இயக்கங்களின் வளர்ச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக்கும் அடித்தளமாகியது. என்றாலும் கூட இயக்கங்களுக்குள்ளிருந்த பலர் இந்தத் தனிநபர் கொலைகளை எதிர்த்தார்கள். இதனுடைய போக்கு சமூகத்தின் நலனை நோக்கியதல்ல, அழிவை நோக்கியதுதான் என அன்று அடித்துச் சொன்னார்கள். சொன்னவர்கள் எல்லோரும் இந்த அழிவு அரசியலுக்குப் பலியாகிப் போனபின்பும், இன்றைய மண்ணின் யதார்த்த நிலைமைகளின் முன்பும், துரையப்பா கொலை செய்யப்பட்டபோது புதிதாய்ப் பார்த்த மனிதனைப் போல, தூக்கம் கலைந்து எழுதல் ஆரோக்கியமானதுதானா!

யுத்தத்திற்கும், துயரத்திற்கும் மத்தியில் நம்பிக்கையீனத்தாலும், எதுவும் செய்ய முடியாத தன்மையாலும் சீரழிந்துகொண்டிருக்கும் மக்களுக்காகச் சிந்திப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் எப்போதும் இந்த அனர்த்தத்தின் மூலகாரணிகளில் இருந்து முற்றாக விடுபடுவதற்கும் அல்லது அதனை அடியோடு மாற்றுவதற்குமுரிய வழிவகைகளின் தேடல்களிலேயே தங்கியிருப்பார்கள். மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டிய அவசியத்தையும், தனிமனித கொலைகளில் உடன்பாடின்மையையும் கொண்டிருப்பார்கள். கொலை செய்யப்படுகின்ற அந்தத் தனிமனிதனால் பாதிக்கப்பட்ட மக்கள் கவலைப்படப் போவதில்லை. ஆனால் இந்தத் தனி மனித கொலைகளாலும், அதைச் செய்பவர்களாலும் அந்தச் சமுகத்திற்கு எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. ஆதரிப்பவர்களாலும்தான். மேலும் இப்படியான கொலைகளால் மூலகாரணிகளோ, அதன் இயல்புகளோ மாறப் போவதுமில்லை. மக்களை அணி திரட்டத் தவறியமையும், அவர்களை முதன்மைப்படுத்தாமல் ஆயுதங்களை முதன்மைப்படுத்த வேண்டிய சூழ்நிலையால் ஏற்பட்ட இயலாமையுமே இந்தத் தனிமனித கொலைகளைச் செய்யத் தூண்டுகிறது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டும் அப்படியான பார்வைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத தலையங்கத்துடன் தூண்டிலைப் போடுவது புதியவழி கவ்வத்தான் என்றால் அது எவ்வளவு அப்பாவித்தனமானது.

மக்களின் உண்மை விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளன எனச் சொல்லுகிறோம். இந்த முனைப்புகளுக்குப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள் என்றும் சொல்கிறோம். ஆனால் இந்திய அரசிற்கும் அல்லது இலங்கை அரசிற்கும் சார்பாக நிற்பவர்கள் கொல்லப்பட்டால் அந்தச் செயலை முதன்மைப் படுத்தாமல் துரோகிகள் என முத்திரை குத்துகின்ற அவசரமும், மற்றவர்கள் கொல்லப்பட்டால் ஜனநாயக மறுப்பு என ஒப்பாரி வைக்குப்

(தொடர்ச்சி 37 ஆம் பக்கத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகள்

அடையாளம் காணப்படாமல்
அந்நியமாகி,
அடைக்கலம் தேடுகின்ற
அநாதைகளாய்...
அந்நியத் தெருக்களில்
நாங்கள்...

அடக்குமுறையை எதிர்க்கவென்று
அணிதிரண்டவர்களும்
அடக்குமுறையாளராகியதில்
அவசரமாய் புறப்பட்ட வாணங்களால்
அலங்கோலமாகி
அகதிகளாய்ப் போன வாழ்வுடன்
அர்த்தமற்ற
அவமானச் சின்னங்களாய்
அடக்கப்படும் உணர்வுகளுடன்
அகன்ற சிறைகளில்
நாங்கள்...

படர்ந்துவரும் பாசிசமும்
தொடர்ந்துவந்து தொல்லை பண்ணும்.
எம்மைக் கொல்ல எண்ணும்.
கடந்தகால அவலங்களை
நிகழ்காலம் நிகழ்த்திக் காட்டும்.
எதிர்கால நம்பிக்கையில்
இன்னமும் நாங்கள்...

திரி கருகி
எண்ணெய் தீர்ந்து போகும்வரை
எரிய நினைக்கின்ற
சுவாலைகளாய்
நாங்கள்...

எரிகின்ற சுவாலைக்காய்
இருக்கின்ற எண்ணெயையும்
எடுப்பவர்களாய்
அவர்கள்.

*

கிருஷ்ணா

www.tamilarangam.net

# அழிவு யுத்தம்தான்.

தூண்டில் நூறுபூக்கள் பகுதியில் எனது கட்டுரையை ஆசிரியர்கள் பிரசுரித்தபோதே எனக்கு ஒரு மனக்கிலேசம் இருந்தது. ஏனெனில் கடந்தகாலங்களில் 'நூறுபூக்கள் மலரட்டும்' என்ற பெயரில் இங்கு இடதுசாரிக்குழுக்களுக்குள் நடைபெற்ற விவாதங்கள் உண்மையில் செய்தது, இருந்த பூக்களையும் கருக்கியதுதான். அவற்றை செவ்வனே செய்த வித்தகர்கள் எமது பட்டிமன்ற பாரம்பரியத்தின் மிச்சசொச்சங்களாவர். இவர்கள் வரைவிலக்கணங்கள் கேட்பார்கள்; பின்னர் தமது மேதாவித்தனத்தை காட்ட சில பெயர்களை அள்ளி வீசுவார்கள்; ரெடிமேட் தீர்வுகள் கேட்பார்கள்; வாசிக்க ருசியாகவிருக்கும். பக்கம்பக்கமாக எழுதித்தள்ளுவார்கள். கண்டபயன் ஏதுமில்லை. ஆளுக்கு 'அரசியல் தெரியும்' என்ற சேர்டிபிகட்டை தவிர.

இந்நிலையில் நீண்டபதிலை பிரஜைக்கும், நமச்சிவாயம் எனும் சகபிரஜைக்கும் அளிப்பது வீணாகவிருக்கும் என்ற போதிலும் மற்றய வாசகர்களுக்கு கொடுக்கவேண்டிய மதிப்பின் அடிப்படையில் சில குறிப்புகளை மட்டும் இங்கு தருகின்றேன். தொடர்ந்தும் விவாதத்தில் பங்குபற்ற வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகின்றேன்.

முதலாவதாக, தடுப்பு யுத்தம் என்று பிரஜைகள் குறிப்பிட்டதை மையப்படுத்தியே அக்கட்டுரை எழுதப்பட்டது. தடுப்புயுத்தத்தைப் பற்றி நமச்சிவாயம், பிரஜைகளின் கருத்தை வாசித்து, உள்வாங்கி, அதனால் முழுமையாக ஆகர்ஷிக்கப்பட்டு மிகத் தெளிவாக ஒரு "சேர்க்கஸ்" பாணியில் அதனை விளக்கி இருக்கிறார். ஏதோ மேலே போகாது, கீழே செல்லாது என்றெல்லாம் கூறியிருக்கின்றார். திரிசங்கு சொர்க்க நிலை இதற்கு மிகவும் பொருத்தமான சொல்லாக இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. 10 – 15 வயதுச் சிறார்கள் மேலே போகிறார்கள். மக்கள் குரல்வளை நசிக்கப்பட்டு கீழே போகிறார்கள். மக்கள் நலன்கொண்ட சக்திகள் அழித்தொழிக்கப்படுகிறார்கள். இந் நிலைக்கு புலிகளின் அரசியல் தெளிவின்மையல்ல கார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணம். அவர்கள் தமது அரசியலில் தெளிவாக இருக்கிறார்கள்.

இரண்டாவதாக, ஹிட்லரின் நடவடிக்கைகளை அரசியல் தெளிவின்மை காரணமாக ஏற்பட்டதென்று கூறுபவர்கள் யாராவது எங்காவது உள்ளார்களா? பாஸிஸ அரசியலின் அடிப்படையையே புரியாததன் வெளிப்பாடுதான் இது. இப் புரிந்துணர்வு இல்லாததால் தான் 'தெளிவான அரசியல்' கதைத்தவர்கள் சின்னாபின்னாப்பட்டுப் போனதும் தெளிவற்ற அரசியல் கொண்ட புலிகள் மக்கள் மத்தியில் வேரூன்றியதும் நடந்ததோ? அந்த வேரூன்றலின் தாத்பரியத்தை புரிதலும் அது உண்மையில் எமது மக்களை எத் திசையில் கொண்டு செல்கிறது என்பதை மக்களுக்கு நேர்மையாகச் சொல்வதிலும் நான், 'சரியான அரசியல்' என்ற போர்வைக்குள் தந்திரோபாயங்களை கையாள முயலவில்லை. என்னைப் பொறுத்தளவில் சரியான அரசியல் கதைப்பவர்கள் என்ற நழுவல் வேலையிலும் பார்க்க எமது சமுதாயத்தினதும், எமது ஆதிக்க அரசியலினதும் அழிவுப் பாத்திரத்தை முன்கொணர்தலையே முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டுமெனக் கருதுகின்றேன். அது நேர்மையானதும் கூட.

மூன்றாவதாக, அழிவு அரசியல் என்றால் என்ன என்று கேட்கிறார்கள்? எமது சமூகத்தில் ஆக்கபூர்வமான பார்வைகொண்ட அரசியலைச் செய்ய முனைந்த, மக்களைப் பரந்த நோக்கி நேசித்த ஒவ்வொருவனுக்கும் இதற்கான வரைவிலக்கணத்தின் தேவை இராது. இருப்பினும் பிரஜைக்கும், சக பிரஜைக்குமான சில குறிப்புகள்:

இறுதியில் அழிவை மட்டுமே மையப்படுத்தியதே அழிவு அரசியலாகும். அழிவு அரசியல் வன்முறை ரீதியாக அழிவு வடிவத்தை எடுப்பதற்கு மிகவும் குறுகிய மத, இன அல்லது வேறு குறுகிய கருத்தமைவுகள் முன் நிபந்தனையாகின்றன. அது வளர்ச்சிக்கட்டத்தில் மக்களின் அழிவைக்கூட ஒரு கருவியாகக் கொள்கிறது. குறுகிய மத, இன உணர்வுகளூடாக மெதுமெதுவாக சிந்தனா ரீதியாக கைது செய்யப்பட்டுவரும் மக்கள் பின்னர் அதன் உயர் வடிவத்தில் அவ்வரசியலின் பகடைக் காய்களாவர். இவ்வாறான அரசியல் ஆதிக்கம் பெறுவதற்கும் அது மக்கள் மத்தியில் வேரூன்றுவதற்குமான அக, புறக் காரணிகளைப் பற்றிய ஆய்வுகள் பல உள்ளன. எமது ஸ்தூலமான நிலமையிலுள்ள பிரத்தியேக காரணிகள் ஆராயப்பட வேண்டியவை. நாம் எல்லா அரசியல் முனைப்புகளிலும் அக் கூறுகள் இருப்பதைக் காணலாம். அவற்றின் வெளிப்பாடுகளாக பல அழிவுகள் நடைபெறுவதைக் காணலாம். ஆனால் அக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுகளை மட்டும் மையப்படுத்தி அதன் ஆதிக்கததின் கீழ் ஓர் அரசியல் வளர்வதும் அதன் இருப்புப் பேணப்படுவதும் சில பிரத்தியேகமான சூழல்களிலேயே நடைபெறும். அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்தியின் ஸ்தூலமான வளர்ச்சியை உற்றுநோக்கின் அதனைப் புரியலாம். புலிகளின் ஸ்தாபன முறை, அது அதன் ஊழியரை வளர்க்கும் விதம், அவர்களுக்கு ஊட்டும் குறுகிய வெறியுணர்வு இவற்றினூடாக மாற்றுக் கருத்துக் கொண்டோரை அழிப்பதிலும் தமது அழிவுச் சக்தியை வெளிக்கொணர்வதிலும் தாமே அழிந்துபோகத் தயாராக இருப்பதான நிலைமையின் உருவாக்கலின் ஊடாக ஓர் பயங்கர மட்டத்தை அது எய்துகின்றது.

ஆக்கபூர்வமான சிந்தனைகளை, மாற்றுக் கருத்துகளை அழித்தொழிப்பது மட்டுமல்ல தம்மை அங்கீகரிக்க வைக்க அல்லது இருப்பைப் பேண தமது அழிவுத்தன்மையை மட்டும் மிகவும் பரவலாகப் பயன்படுத்தி மற்றவர்களை குறிப்பாக மக்களைக் கையாலாகாதவர்களாக ஆக்குவதூடாகச் செயற்படும். சிங்கள பௌத்த இனவாதக் கருத்தமைவு சாராம்சத்தில் எமது நாட்டின் சூழலில் அழிவுக்கான அரசியல் வளர்ச்சிக்கான சூழலிற்கு வித்திட்டது. அதன் ஸ்தாபன மயமாக்கலின் விளைவை நாம் பார்த்தோம். தொடர்ந்தும் பார்க்கிறோம். அதேவேளை தமிழ்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஸ்தாபன முறை, அதன் கண்ணோட்டம், அதன் வளர்ச்சிப் போக்கில் நடாத்திய அழிவுகள், அது மேலாதிக்கத்திற்கு வந்த மார்க்கம் என்பவற்றை ஆராயும்போது எவ்வாறு அது அழிவு அரசியலுக்கான எல்லாக் கூறுகளையும் ஒன்றிணைத்து இறுக்கமாக்கி வந்துள்ளதைப் புரியலாம். அது தெளிவற்ற சிந்தனையால் ஏற்பட்டதல்ல. அதன் உலகப் பார்வை குறுகிய தமிழ் இனவாதத்தில் பின்னிப் பிணைந்துள்ளதென்பதே அடிப்படை. குறிப்பாக, சயனைட் குப்பி அரசியலைக் கண்டு பிரமைப்படுத்துவதைவிட அதன் உள்ளார்ந்த பலவீனத்தை இனம் காணுதல் அவசியம்.

நான்காவதாக, புலிகளுக்கும், அரசிற்கும் இடையில் பலமிழந்து, மாண்பிழந்துள்ள மக்களை நோக்கிய பார்வையில் உள்ள தவறே, புலிகளை விமர்சித்தால், அரசைக் கடுமையாக விமர்சிக்கவில்லை என்ற கருத்தின் வெளிப்பாடாகும். தந்திரோபாயத்திற்காக தொடர்ந்தும் அரசு பற்றி புராணம் பாட வேண்டிய தேவையில்லை என்றே நினைக்கின்றேன். அரசைப் பற்றியும், சிங்களப் பேரினவாதம் பற்றியும் தமிழ் மக்களுக்குத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. ஆனால் எமது மக்களைக் குறிப்பாக சிறார்களை மூளைச் சலவை செய்யும்

www.tamilarangam.net

ஆற்றல் அவற்றிற்கு இல்லை. விடுதலை இயக்கங்கள் என்பவை உருவாகிவரும் அரசுகளே. இவை எதிர்காலத்தில் ஒரு அரசாகப் பரிணமிக்கலாம். அவை, நாம் எதிரியென யாரைக் குறிப்பிட்டுப் போராடுகின்றோமோ அந்த சக்தியை குறிப்பான அம்சங்களில் எமக்கு எதிராக்கிய கருத்தமைவுகள் மற்றும் அம்சங்களைத்தான் நாமும் காவித் திரிந்து மேலும் இறுக்கமாக்குகின்றோம் என்றால் அதுவும் குறிப்பாக அவற்றை மட்டுந்தான் கொண்டிருக்கிறோம் என்றால் முழுப் போராட்டத்தின் அர்த்தம் தான் என்ன?

பேரினவாதக் கருத்தமைவில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதென்றவுடன் பிரேமதாசாவுக்கு வக்காலத்து வாங்குவதாக காணும் இவர்கள் இலங்கை அரசின் ஒரே தவறு அது பேரினவாதமாக இருப்பது மட்டுந்தான் எனக் கருதுகிறார்கள் போலும். சிங்கள புத்திஜீவிகள் சிங்களப் பேரினவாதத்தை அம்பலப்படுத்தட்டும். அது அவர்கள் கடமை. தமிழ் இனவாதத்தை புரியாததும் அதற்கெதிராக கறாராக நிற்க முடியாததும்தான் முஸ்லீம்களின் படுகொலையையும், வெளியேற்றங்களையும் தவறு எனக் கண்டித்து தட்டிக் கழிப்பதுடன் முடிவடைகிறது. கூடுதலாக தந்திரோபாய ரீதியான தவறாகவே அது கருதப்படுகின்றது. அரசியல் தெளிவில்லாத காரணத்தால் விடப்படும் தவறாகவே அது கருதப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசு இனவாதத்தில் இருந்து விடுபட்டு முக்தி அடைந்துள்ளதாக ஒருவரும் கூறவில்லை. சிங்கள பௌத்தவாத கருத்தமைவில் வெடிப்புகள் ஏற்படுவதும் இன்றைய அரசு இனவாதத்தில் முற்றுமுழுதாகத் தங்காமல் இருப்பைப் பேணக்கூடிய பல்வேறு சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதுமே கூறப்பட்டது. அதனை அது செய்யுமா இல்லையா என்பது எமது போராட்ட அணுகுமுறையிலும் தங்கியுள்ளது.

ஐந்தாவதாக, சுயாதீனக் குழுக்கள் பற்றி ஆத்திரத்துடன் அவர் அதிகம் பிதற்றியுள்ளார். மக்கள் அமைப்புகள் உருவாகவிடாது புலிகள் தடுப்பது பற்றி இங்கு குறிப்பிட்டவுடன் உடனடியாக அவை இராணுவத்தை விரட்டியடித்துவிடும் என்றோ அல்லது விடுதலையைப் பெற்றுத் தந்துவிடும் என்றோ ஏதோ இலகுபடுத்திக் கூறியிருப்பதுபோல் கருதுகின்றார்.

அரசபடை அக்கிரமம் செய்கின்றது. அந்த அக்கிரமத்தின் மத்தியில்தான் கிழக்கு மாகாண மக்கள் வாழ்கின்றார்கள். அங்கு வாழும் மக்கள் பலமற்றவர்களாக இருக்கும்போதும் எல்லோரும் சயனைட் அருந்தி இறந்துவிடவுமில்லை. மனித உரிமை மீறல்களுக்கு எதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராக மக்கள் ஓர் காலத்தில் ஏதோ ஓர் மட்டத்தில் காட்டிய எதிர்ப்புகளும் இக் கட்டத்தில் ஏன் இல்லாது போனது என்பதை அறிய முற்படின் புலிகளின் அரசியலின் பலாபலன்களை அறிந்து கொள்ளலாம். இவர், புலிகள் மக்களைப் பற்றி வைத்திருக்கும் கண்ணோட்டத்திலேயே தானும் இறுமாப்பாக மக்கள் என்ன செய்தார்கள் எனக் கேட்கிறார். மக்களுக்கு நமது ஆதிக்க அரசியல் என்ன செய்கின்றது? இவற்றை அறியப் பிரஜைகளும், நமச்சிவாயமும் தேசத்தில் அந்தந்தப் பிரதேசங்களுக்கு சென்று வந்து குறிப்பு எழுதுவார்களாக!. புலிகளின் தடுப்பால் அப் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாவிடின் நன்கு அறிந்தபின் குறிப்பு எழுதட்டும்.

கொக்கட்டிச்சோலை படுகொலையின் மறுபக்கத்தை நாம் பார்க்குமிடத்து பல உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம். கொக்கட்டிச்சோலையில் மக்கள் வாழும் பகுதியில் கண்ணிவெடியை வெடிக்க வைத்த பின்னர் 20 இராணுவம் மட்டுமே முதலில் வந்து அட்டகாசம் புரிந்தது. பின்னர் பலமணி நேரம் கழித்து திரும்பவும் வந்து சுட்டுப் பொசுக்கு மட்டும் காட்டில் ஒளிந்திருந்துவிட்டு மறுநாள் வீடியோ கமராவுடன் படம் பிடித்த கதை தெரிந்தால் அழிவு அரசியலின் சாராம்சம் புரியும். கிராமத்தில் உள்ளவர்கள் காதோடு காதாகச் சொன்னது "... பெடியள் எங்களைப் பாது காக்க வேணுமென்டால் முதலிலே சொல்லியிருக்கலாம். அல்லது இரண்டு சூடு தூரத்தில் இருந்து சுட்டிருந்தால் ஆமிக்காறன் அவ்வளவு கெதியில் வந்திருக்கமாட்டான். அவன் வெளியில் வருமுன்னர் நாங்கள் காட்டுக்குள் போயிருப்போம்..."

இந்தக் குரூரமான எதிரியை, சிங்கள பௌத்த இனவாத அரசினை இவ்வாறு மக்கள் மீது ஏவிவிட்டு மக்களைத் துன்பங்களுக்கு உள்ளாக்கி மறுபுறம் அதற்கு எதிராக வேறு எச் சக்திகளும் இல்லாத அளவுக்கு அழித்தொழித்து தனது இருப்பின் தாற்பரியத்தை நிலைநிறுத்துவதுதான் அழிவு அரசியல்.

ஆறாவதாக, நான் புலிகளின் அரசியலை வெறுக்கிறேன். புலிகளின் பின்னால் மாயும் அப்பாவி இளைஞர்களையல்ல. அப்பாவி இளைஞர்களை பாஸிஸ இராணுவ இயந்திரத்தின் ஒரு பகுதியாக மாற்றி முழு ஆளுமையையும் உறிஞ்சி எடுத்து, சிந்திக்க விடாதும், வெளியேறவிடாதும் சதாகாலமும் இராணுவ மாயைக்குள் வைத்து மற்ற எந்தப் போக்கையும் வளர விடாது அழிப்பதையே வேதமாகக் கொண்டிருக்கும் அரசியலை வெறுக்கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சயனைட் குப்பிக்குள் அவன் வாழ்வைக் குறுக்கிவிட்ட, மானிட நேயத்தின் மிச்ச சொச்சங்களை யும் இல்லாது ஒழித்த, இறுதியில் ஸ்ரீலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தி யத்திற்கும் துணை போகும் இந்த அரசியலை வெறுக்கின்றேன். ஏன் சிங்கள பேரினவாதத்தில் ஏற்படும் வெடிப்புகளை மூடிவிடும் அரசிய லைக் கண்டு வெறுப்படைகின்றேன்.

திரும்பவும் கூறுகின்றேன் ஒரு வரின் நிலைப்பாடு அவன் எதனை விரும்புகிறான் என்பதில் மட்டு மல்ல, எதனை வெறுக்கின்றான் என்பதில் இருந்தும்தான் தீர்மானி க்கப்படுகின்றது.

தூண்டிலில் வந்த ஈழத்திலிரு ந்து எழுதிய 'புலிகள் - மேதினம் - ஊர்வலம்' எனும் கட்டுரை எனது பதிலை விட தெளிவாகப் பல உண் மைகளை முன்வைத்துள்ளது. அது தேசத்திலிருந்து வந்த குறிப்பு. ஆனால் 'பிரஜைகள்' எழுதும் 'தேசத்தின்' குறிப்புகள் 'நாடற்ற வன்' எழுதும் 'எதிரியின் பாசறைக் குறிப்புகளாக' இருப்பது ஏனோ?

* பு.கணபதிப்பிள்ளை (ஈழம்)

## டாக்குத்தர்மார் எங்கே ????

ஆசியாவில் கல்வியறிவு கூடிய நாடுகளில் இலங்கையும் ஒன்று என்றும் இலங்கையின் கல்வியமை ப்பு திறம் என்றும் அமைச்சர்கள் முதற்கொண்டு பலரும் அடிக்கடி மார்தட்டிக் கொள்கிறார்கள். இவ ர்கள் பறைதட்டுமளவிற்கு இப் போது எத்தனை இலட்சம் எஞ்சி னியர்களும், டாக்குத்தர்களும் இல ங்கையில் இருக்க வேண்டும் ?!

1981 - 1987 வரை மருத்துவப் பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு சுமார் 2,000 டொக்ரர் கள் வெளியேறியிருக்கிறார்கள். ஆனால் இன்றளவில் இலங்கையி லுள்ள டொக்ரர்களின் தொகை 300 மட்டுமே!. அதாவது 5,000 பேரு க்கு 1 மருத்துவர் மட்டுமே!!.

அப்படியானால் மிகுதி டாக்குத் தர்மார் எங்கே? இலங்கையின் "பொருளாதார" காரணிகளால் எல் லோரும் மேற்கு நாடுகளுக்குப் பற ந்து விட்டார்கள்!.

ஆக மொத்தத்தில் மூலவளத்தை மட்டுமல்ல, மூளைவளத்தையும் பண க்கார நாடுகளுக்குத் தாரை வார் க்கும் அரசிடமிருந்து அதிகாரத் தைப் பறிக்காமல் நாட்டையும், தம் மையும் காப்பாற்ற மக்களால் முடி யுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரிஸ்:

# மாலா கடைச் சந்தியில்

## புலிகளின் அட்டகாசம் !

கேசவன், செல்வி, மனோகரன், தில்லைநாதன், கோவிந்தன், ஸ்ரீநிவாசன் மற்றும் பலர் கடத்தப்பட்டது தொடர்பான "தொடரும் கடத்தல்கள்" துண்டுப் பிரசுரத்தை 08.10.91 செவ்வாய் மாலை 6 மணியளவில் விநியோகித்துக் கொண்டிருந்த போது மாணிக்கவாசகம் மற்றும் இருவர் அவ்விடம் வந்து இவர்களைக் கடத்தினதென்று உங்களுக்கு எப்படித் தெரியும் எனக் கேட்டனர்.

"இப்ப எப்பிடிக் கடத்தினது என்பதல்ல பிரச்சினை. கடத்தினால் சரியா, பிழையா என்பது தான் பிரச்சினை" என அவர்களுக்குக் கூறித் தொடர்ச்சியாக சுதந்திரம் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிக்கும்போது மேலும் இரு தடியர்களும் அங்கு வந்தனர். (புலிகளுக்கும் நல்ல உடல்வாகு உள்ளவர்களுக்கும் அப்படி என்னதான் பிரிக்க முடியாத உறவோ?).

அப்போது மாணிக்கவாசகம் "கேசவனின் அரசியல் நடவடிக்கைகள் உங்களைவிட எங்களுக்குத் தான் நல்லாத் தெரியும்" எனக் கூறினார்.

" கேசவனின் அரசியல் நடவடிக்கைகள் எப்படி இருக்கிறது அல்லது எப்படி இருக்க வேண்டும் என்பது இன்றைக்குள்ள பிரச்சினையில்லை. அரசாங்கத்தினதும் மற்ற இயக்க இராணுவங்களினதும் நெருக்கடியில் ஒரு மனிதன் அகப்பட்டுக் கொண்டிருக்கும்போது அதற்குச் சமமாக நாங்களும் அந்த மனிதனின் வாழும் உரிமையைப் பறிப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை" எனச் சொல்லி, "இலங்கையில் இருந்து வெளிக்கிட்டு இங்கு வந்து சேர்ந்தவுடன் அம்மா, அப்பாவுக்கு நான் சுகமாக வந்து சேர்ந்தேன் எனக் கடிதம் எழுதி எமது பாதுகாப்பை, இருப்பை உறுதிப்படுத்துகிறோம். இலங்கையில் இருக்கும் ஒரு மனிதன் குறித்து நாங்கள் ஏன் இப்படிப் பார்க்க மறுக்கிறோம்" என அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது மேலும் பலர் அங்கு வந்து துண்டுப்பிரசுரம் அனைத்தையும் பறித்துச் சென்றனர்.

கதைத்தது அவர்களுக்கு விளங்

www.tamilarangam.net

கவில்லையோ அல்லது தங்களால் விநியோகிக்கப்படாத எந்த வெளியீடும், துண்டுப் பிரசுரமும் தங்களுக்கு எதிராகத்தான் இருக்கும் என்ற அவர்களின் எப்போதைக்குமான விளக்கமோ தெரியவில்லை, துண்டுப் பிரசுரங்களைப் பறித்துச் சென்றுவிட்டனர்.

தமிழில் என்னத்தைப் பற்றி எழுதினாலும் புலிகளுக்கு ஏன் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது என்று புலிகள் அல்லாதவர்களும் மற்றும் அனைவரும் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

• சுகன்

---

# பட்டணத்தில் பூதம்!

ஐரோப்பாவில், குறிப்பாக ஜேர்மனியில் வாழ்கின்ற வெளிநாட்டவர்களுக்கு எதிரான புதிய நாஸிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு மத்தியில் சொந்த நாட்டிற்கும் திரும்ப முடியாத சூழ்நிலையின் கைதிகளாக இருக்கும் நிலைமையை எண்ணிக் கவலையடைந்த ஏரம்பர் தனது மன உளைச்சல்களைப் பகிர்ந்துகொள்வதற்காக சிநேகிதர்களைச் சந்தித்தார்.

*ஏரம்பர்:* உங்களுக்கு விஷயம் தெரியுமோ? உவங்கள் புதிய நாஸிகள் வெளிநாட்டுக்காரருக்கு மேலே அந்தமாதிரியெல்லே பாயுறாங்கள். நேற்றுக்கூடப் பதினாலு இடத்தில் எரித்திருக்கிறாங்கள். குழந்தைகளைக்கூட அவங்கள் விட்டு வைக்கவில்லை.

*நடேசர்:* ஓம். நானும் ரி.வி. யிலை பாத்தனான். பேப்பரிலையும் போட்டிருக்கிறாங்கள். ஆபிரிக்கரை உயிரோடை கொளுத்தியிருக்கிறாங்கள் எண்டால் பாருமன்.

*ஏரம்பர்:* ரி.வி.யும், பத்திரிகைகளும் நாஸிகளின்ரை வெளிநாட்டவருக்கெதிரான தாக்குதலைப் பற்றிச் சொன்னாலும்கூட, உண்மையில் அவை நாஸிகளுக்குச் சார்பாகவே செயற்படுகன்றன. பில்ட் என்ற மஞ்சள் பத்திரிகை கும்பலாக நிற்கும் வெளிநாட்டவர் படத்தைப் போட்டு, அதற்குக் கீழ் <அகதிகளுக்கு எங்களுடைய பணந்தான் போகிறது> என்ற ஒப்பாரியை எழுதிப் போஸ்ரர்களாக எல்லா நகரங்களிலும் ஒட்டியிருக்கிறது.

*நடேசர்:* நானும் கவனிச்சனான். முந்திப் பிந்தி எங்களைப் பற்றித் தெரியாத டொச்சுக்காறங்களெல்லாம் இப்ப எங்களைக் கண்டவுடனை பல்லை நெறுமுறாங்கள். ஏசுறாங்கள். நிலைமை எங்கைபோய் முடியப் போகுதோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஏரம்பர்:* எங்கை மற்ற ஆட்களைக் காணவில்லை. எல்லோரும் சேர்ந்து கதைத்தால்தானே நாலு விசயம் அறியலாம். கனபேருக்கு நாஸி பிரச்சினை இன்றும் சரியாகப் பிடிபடவில்லை. தெருவில் வைத்து அடி வாங்கும்போதுதான் தெரியப் போகிறது.

*நடேசர்:* அதெண்டால் மெய்தான். இதுகளிலை ஆர் அக்கறை காட்டப்போகினம்? மற்ற றூமிலை எல்லாரும் ரூட்டி புறூட்டி பாத்துக் கொண்டிருக்கினம். கூப்பிட்டால் வராங்கள். நாங்கள் அங்கை போயிருந்து கதைப்பம்.

(இருவரும் பக்கத்து அறைக்குப் போகிறார்கள். தொலைக்காட்சியில் பெண்கள் உடைகளைக் களையும் நிகழ்ச்சி போய்க் கொண்டிருக்கிறது.)

*முகத்தார்:* என்ன ஏரம்பர்! ரண்டு மூண்டு நாளா ஆளையே காணேல்லை. எங்க காணும் போனனீர்?

*ஏரம்பர்:* வெளியில் திரிவதில் இப்ப கொஞ்சம் பயமாக் கிடக்கு. இந்த நாட்டின்ரை சூழ்நிலையும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாமல் போட்டுது. வளர்ந்துகொண்டிருக்கிற புதிய நாஸித்தனம் சொல்லுது ஜேர்மனிய ரத்தம் ஓடுறவனைத் தவிர்ந்த அனைவரும் இந்த நாட்டைவிட்டு வெளியேறியே தீர வேண்டும் என்று. 'காஸ்'உம், 'அசிற்'றும் இன்னும் பிற நவீன முறைகளும் வெளிநாட்டவருக்கெதிராகப் பாவிக்கப்படுகின்ற இந்தச் சூழலில் அடிக்கடி வெளியில் திரிவதென்பது நடக்கக்கூடிய காரியமா என்ன! உந்த ரி.வி.யை நிப்பாட்டுங்கோ. வடிவாகக் கதைப்போம்.

*முகத்தார்:* அதைவிடும் ஏரம்பர். அது தன்ரைபாட்டிலை போகட்டும். ஏதோ சொன்னீர் வெளியிலை திரியப் பயமாக் கிடக்கெண்டு. நாங்களும் ரி.வி. பாத்தனாங்கள்தான். ஆனால் இந்தப் பக்கம் ஒண்டும் நடக்கேலை. தமிழாக்கள்தான் உண்மையான பிரச்சினையாலை வந்தவையெண்டு அவங்களுக்குத் தெரியும். நிலைமை அப்பிடியிருக்க நீர் ஏன் காணும் தேவையில்லாமற் பயப்பிடுறீர்?

*ஏரம்பர்:* எரிகின்ற இடங்கள் இன்று எரிக்கப்படும் என நேற்று நாங்கள் எதிர்பார்த்தோமா? அதே போன்றதுதான் நாமிருக்கின்ற இந்தப் பக்க நிலைமைகளும். இரண்டாவது உலகமகா யுத்தத்திற்கு முன்னைய காலங்களை அறிந்திருந்தால் நாஸிஸத்தின் இயல்புகள் எப்படிப் பட்டவை என்பதைப் புரிந்துகொள்ளலாம். உயிரோடு புதைக்கப்பட்ட மில்லியன்கணக்கான யூத மக்களை நினைவுகூர முடியுமாயின் இந்தப் புதிய நாஸித்தனம் எங்களை விட்டு வைக்குமா என்ற மதிப்பீடுகள்

www.tamilarangam.net

தெரியவரும். இதுவரையும் எங்கடை கட்டிடத்திலை இருக்கிற சனங்களை அடிக்கவில்லை, எரிக்கவில்லை என்பதால் அவர்கள் எங்களை ஒன்றுமே செய்யமாட்டார்கள் என்ற நினைப்பில் இருப்பது வடித்தெடுக்கப்பட்ட முட்டாள்த்தனம்.

*அத்தார்:* ஏரம்பருக்குச் சும்மா பயப்படுத்திற வேலைதான். ஜேர்மனியில் அப்பிடி நடக்கமுடியுமே! நடந்தாலும் கவுண்மேந்து விடுமே. இது ஒரு ஜனனாயக நாடெல்லே. இரண்டொரு இடத்திலை அடிச்சிருக்கிறாங்கள்தான். ஆனால் அதை அமத்திப் போடுவாங்கள். உலகத்திலை ஜேர்மனிக்கு எவ்வளவு நல்ல பெயர். அதைக் கெடுக்க விரும்புவாங்களோ. எங்களுக்கு எப்பிடியும் பொலிஸ் பாதுகாப்புக் கிடைக்கும். இனிமேலும் தெரியாத விஷயங்களைக் கதைக்க வேண்டாம்.

*ஏரம்பர்:* இங்கே ஒண்டும் நடக்காது. நடந்தாலும் கவுண்மேந்து விடாது. பொலிஸ் பாதுகாப்புத் தரும் என்பது போன்ற நம்பிக்கைகள் அத்தாருக்கு மாத்திரமல்ல, நம்முள் பலருக்கு இருக்கிறது. இதற்குரிய காரணம் ஜேர்மன் மொழி சம்பந்தமான புலமைகளும், ஜேர்மனியின் ஜனனாயகம் பற்றிய பிரமைகளும்தான். ரி.வி. .பத்திரிகைகள் வாயிலாக வெளிவருகின்ற செய்திகளை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாதபோது ஜேர்மனி அன்னமிட்ட கையாக காட்சி தருவது தவிர்க்க முடியாதது. எங்கடை ஊகங்கள், பிரமைகளைக் கலைப்பதற்கு றோட்டுக்கு வந்து நாட்டு நடப்புகளை அறியவேணும். பொது விஷயங்களிலை பங்கெடுக்க வேணும்.

*அத்தார்:* ஆக வெருட்டிறியள். என்ன இருந்தாலும் ஜேர்மன் அரசாங்கம் எங்களை இங்கே தங்க வைத்துச் சாப்பாடு போடுதுதானே. அவங்கள் அடிச்சாலும் நாங்கள் பொறுக்கத்தானே வேண்டும்? அவங்கள் எங்களை இங்கே வரச் சொல்லி கூப்பிட்டவங்களே?

*நடேசர்:* உப்பிடியான கிறவுட்டுக்கு அடிவிழுந்தாப் பிறகும் உண்மை வெளிக்குமோ என்னவோ! உலகத்திலை என்ன நடக்குதெண்டு பாக்கிறேலை. றெசிலிங்கிலை எலிஸபெத் இப்ப யாரோடை மனேஜர், புதுப்படத்தில் குஷ்புவுக்கு யார் ஜோடி, ஸ்ரெபியின் தற்போதைய காதலன் யார்... இதுகளை மட்டுந்தான் பாடமாக்கி வைச்சிருக்கிறாங்கள்.

*அத்தார்:* உந்த நக்கல்தானே வேண்டாமென்கிறது. நடேசருடைய கதையைப் பார்த்தால், தானொண்டும் பார்க்கிறேல்லை எண்ட மாதிரியெல்லே கிடக்கு.

*ஏரம்பர்:* உங்களுடைய நியாயங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை கொஞ்சம் மறந்துவிட்டு, இந்த நாட்டிலை நடந்துகொண்டி ருக்கின்ற நடக்கப் போகின்ற அநி யாயங்களை ஒருதடவை பார்ப் போம். நாங்கள் இதற்கு என்ன செய்யலாம் என்று யோசிப்போம்.

*அத்தார்:* சும்மா கதையாதையும். ஏதோ உமக்குத்தான் விஷயம் கூடத் தெரியும் என்டு அலம்பாதை யும். நேற்றுக்கூட வேலை செய்கிற இடத்திலை ஒரு ஜேர்மன்காரன் சொன்னவன் எண்பத்தெட்டுக்கு முதல் வந்த ஸ்ரீலங்கா ஆக்களைத் திருப்பியனுப்ப மாட்டாங்கள் என்டு.

*ஏரம்பர்:* தற்காலிகமாக என்றால் நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் ஜேர்மன் அரசின் இன் றைய நோக்கம் என்ன? என்பதை முழுமையாக அறிந்துகொள்வதினூ டாக எமக்குரிய சாதகமற்ற பக்க ங்களை நீங்கள் புரிந்துகொள்ள லாம். இந்த அரசாங்கத்திடம் 16வது சட்டம் ஒன்றிருக்கிறது. அந்தச் சட்டம் அகதிகளை ஏற்றுக் கொள்வதற்காகப் பல வருடாங்களு க்கு முன்பு ஐ.நா.வின் ஏற்பாட்டில் பேரில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் நாங்களும், இன்று வருபவர்களும் இங்கே தங்க அனுமதிக்கப்பட்டுள் ளோம். ஆனால் இந்தச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசு பலதட வைகள் முயன்றுள்ளது. மனித உரி மைகள் சங்கங்களினது சில எதிர் க்கட்சிகளின் ஒத்துழையாமையும் சேர்ந்து அம் முயற்சியை இன்னும் வெற்றிபெறச் செய்யவில்லை. என் றாலும் சில மாற்றங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அகதிகளின் விசாரணைகளை ஆறு கிழமைக் குள் விசாரித்துத் தீர்ப்புச் சொல் லப்படவேண்டும் என்றும், தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை ஆறு கிழமைக்குள் நாடுகடத்த வேண்டும் என்றும் மாற்றம் கொண்டுவரப் போகிறார்கள். இதைவிட இந்த அரசு தான் வளர்த்த இந்தப் புதிய நாஸிகளை ஊக்குவிக்கின்ற கைங் கரியத்தைச் செய்துகொண்டிருக்கி றது. பொலிஸ்துறையின் அலட்சி யமும், பத்திரிகைகள் கக்குகின்ற துவேசமும் கூட அரசின் யுக்திகள் தான். உச்சக்கட்டமாக பழைய இராணுப முகாம்கள், கைவிடப்பட்ட ஆஸ்பத்திரிகள், பாடசாலைக் கட்டி டங்கள் 500ஐ எடுத்து அதற்குள் எல்லா அகதிகளையும் கொண்டே விடப் போகிறார்களாம்.

*நடேசர்:* அப்பதான் ஒரேயடியா எல்லாரையும் கொளுத்தச் சுலபமா யிருக்கும். ஹிட்லர் உப்பிடித்தானே செய்தவன்.

*முகத்தார்:* சரி ஏரம்பர். நீர் சொல்லுறதை ஏற்றுக்கொள்ளுறன். சொந்தநாட்டிலை வாழமுடியாமல் தான் இங்க அகதிகளாக ஓடிவந் தனாங்கள். இங்கயும் பிரச்சினை யென்டால் இனி எங்க ஓடுறது?

www.tamilarangam.net

அதனால இங்க நிண்டு சமாளிக்கிறதைத் தவிர வேறு வழியில்லை. கைவசம் மிளகாய்த் தூளும், சுவிச் கத்திகளும் இருக்கேக்கில ஏன் பயப்பிடுவான்.

*நடேசர்:* முகத்தாற்றை கதையைக் கேட்கச் சிரிப்புத்தான் வருகுது. இந்த மிளகாய்த் தூளையும், கத்தியையும் வைத்துக்கொண்டு சொந்த நாட்டில ஏன் எம்மால் வாழமுடியாது போயிற்று. அங்க சனங்கள் வாழவில்லையா? ஒவ்வொரு மரர்க்கையும் இருபத்தைந்தால் பெருக்குவதால் ஏற்படுகின்ற உணர்வுகளின் பிரதிபலிப்புத்தான் இந்த சமாளிப்புக் கனவுகள். ஜேர்மனியில் வாழ்வதில் எவ்வளவுதான் சிக்கல்கள் வந்தாலும் இங்க கிடைக்கக்கூடிய சொற்ப சலுகைகளை இழக்கத் தயாரில்லை என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது.

*ஏரம்பர்:* அண்ணை சொல்வது உண்மை. மொட்டை அடித்தவர்கள் மட்டுந்தான் நாஸிகள் என்றில்லை. அரசும், அதன் யந்திரமும் கூட நாஸித்தனம் நிரம்பியவையே. வெளிநாட்டவர்களுக்குச் சார்பாக உள்ள சொந்த ஜேர்மன் மக்களையே 'கவனிக்க'வும், கண்காணிக்கவும் சொல்லி அரசு பொலிசுக்கு உத்தரவிட்டிருக்கிறது. இப்போது இந்தப் பிரச்சினைகளின் தாக்கங்களை உணரவில்லையானால் அடுத்த வருடம் ஐரோப்பா ஒன்றுபடும் போது அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள நாஸிகள் எம்மை இணைத்து இணைந்து அடிப்பார்கள் என்பதையும் மறந்துவிடுவோம். அந்தக் காலத்தில் எங்கள் மண்ணில் இயக்கத்திற்குப் போவது என்பது ஒரு பாஷனாக இருந்ததுபோல இன்று இங்கே புதிய நாஸிகள் கும்பலுடன் சேர்வதும் ஒரு பாஷனாக வந்துவிட்டது என்ற பயங்கரமான உண்மையையும் இந்தக் கட்டத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*அத்தார்:* ஏரம்பரை விட்டால் எங்கடை கூட்டணிகாறரைப்போல பேசத் தொடங்கிவிடுவார். உப்பிடித்தான் முந்தி ஈராக் சண்டையில உலகம் அழியப் போகுதெண்டு புராணம் பாடினவர். ஆனால் நடந்தது என்ன? அதாலை சும்மா பிரமையிலை ஒண்டும் கதைக்க வேண்டாம். நான் திரும்பவும் சொல்லுறன் இந்த ஜேர்மனியில ஒண்டும் நடக்காது. அப்பிடி நடந்தாலும் கவுண்மேந்து விடாது. பொலிஸையோ ஆமியையோ அனுப்பி எங்களைப் பாதுகாக்கும்.

*முகத்தார்:* நேற்று ஒரு ஜேர்மன்காறன் சொன்னான் கிழக்கிலதான் நாஸியள் கூடுதலாக இருக்கிறாங்களெண்டும், இன்னும் ரண்டு வருடத்தில மேற்கின் வளர்ச்சிக்கு ஈக்குவலா கிழக்கு வந்துவிடும். அப்போது இந்த நாஸித்தனம் இல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற் போய்விடுமென்டும்.

*ஏரம்பர்:* உங்களுடைய நம்பிக்கைகளாவது வாழட்டும். இந்த இடத்தில் உள்நாட்டமைச்சர் அகதிகள் சம்பந்தமான பாராளுமன்ற விவாதத்தில நிகழ்த்திய உரையை உங்களுக்குச் சொல்வது உபயோகமாக இருக்கும். 'எல்லோரும் நாஸிகளைப் பற்றியும், வெளிநாட்டவருக்கெதிரான தாக்குதல்களை கண்டிக்கிறீர்கள். ஆனால் இந்த நாஸிகள் யார்? ஜேர்மனியின் இளம் தலைமுறையினர். அவர்கள் இங்குள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையைப் பார்த்துப் பயப்பிடுகிறார்கள். அதனால் இங்குள்ள வெளிநாட்டவரை அவரவர் நாடுகளுக்குத் திருப்பியனுப்புவதைப் பற்றிக் கதைத்தீர்களா? முதலில் வெளிநாட்டவரை நாடுகடத்த ஆதரவு தாருங்கள். அவர்களை திருப்பியனுப்பியதும் இந்தப் புதியநாஸிஸம் தானாகவே இல்லாமற் போய்விடும்'

*நடேசர்:* ஏரம்பர் நீர் எப்பிடித் தான் விளங்கப்படுத்தினாலும் இவைக்கு ஏறப்போறதில்லை. திரும்பத் திரும்ப இங்க இருக்கலாம் என்பதற்கான காரணங்களைத்தான் கனவுகண்டுகொண்டிருப்பினம்.

*ஏரம்பர்:* கனவுகள் உண்மைகளை உணர்த்தப் போவதில்லை. மொத்தத்தில் இந்த நாட்டில் ஆட்சி ஹிட்லரின் கல்லறையில் பூத்த ஒன்று தான். நாங்களோ சொந்தநாட்டின் சமகாலச் சம்பவங்களை அறிய விரும்பாது இந்த நாட்டிலேயே வாழ்வைத் தொடர விரும்புகிறோம். ஆனால் இந்த ஆட்சியோ எம்மைக் கலைக்க விரும்புகிறது. கலைய விழையாவிடின் நாளை தலைகள் கொய்ய முனையும். இங்கு வாழமுடியாவில் நாட்டுக்குத் திரும்புவோம் என யாராவதுதான் சொன்னீர்களா? அப்படித்தான் சொல்லவில்லையென்றாலும் இங்கு வளர்ந்துவரும் இன வெறிப் பூதத்தை எதிர்க்க அனைத்து அகதிகளும் எப்படி ஒன்றுபட் டுச் செயற்படலாம் என்று யோசித்துப் பார்த்தீர்களா? இனவெறியை யும், பாஸிஸத்தையும் எதிர்த்தும், அகதிகளின் உரிமைகளுக்காகவும் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் எதாவதில் பங்குபற்றியிருக்கிறோமா? ஒன்றுமேயில்லை. நாள் முழுவதும் நக்கலடிப்பதும், அரட்டையடிப்பதுமான மனப்போக்கு யாராவது குற்றட்டும் எங்களுக்கும் கிடைக்கும் அரிசி என்பதைப் போன்று கேவலமானதே. இனவெறிப் பூதம் மலி தர்களைப் பிடித்துத் தின்பதைப் பற்றி அலட்டிக்கொள்ளாத நாங்க ளும் இதம் குப் பலியாகவேண்டிவரும்.

* அ.வே.சுப்பையா

oooooooooooooooooooo



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.09.1991

பிரேமதாசா மீது அரசியல் குற்ற விசாரணைகளை மேற்கொள்ளக்கோரி எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த மனுவுக்கு EPRLF ஆதரவு தெரிவித்துள்ளது. இதற்கான பிரதான காரணமாக LTTEயுடன் அரசு கூட்டுச் சேர்ந்ததையே இவ்வியக்கம் முன்வைத்துள்ளது.

தென்பகுதியில் ஆங்காங்கே JVPயின் நடவடிக்கைகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

02.09.1991

முல்லைத்தீவு, மணலாறு பகுதியில் இராணுவம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. குண்டுவீச்சு விமானங்கள், ஹெலி உதவியுடன் நடாத்தப்படும் இத் தாக்குதலில் 12 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மீது குற்றஞ்சாட்டி பதவி நீக்கம் செய்ய மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிக்கு TELO, இ .தொ.கா. என்பன எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

விசாரணை செய்ய வேண்டும் என 2 வருடங்களுக்கு முன் அழைத்துச் செல்லப்பட்ட 2 தோட்ட இளைஞர்கள் பற்றி இன்றுவரை தகவல் எதுவுமில்லாததால் அவர்களின் பெற்றோர்கள் ஆறாத் துயரில் மூழ்கியுள்ளனர். இதைப் பற்றி பொலிஸ், செஞ்சிலுவைச் சங்கம், தமிழ் அமைச்சர்கள் எல்லோரிடமும் புகார் கொடுக்கப்பட்டும் இதுவரை ஒருவித பதிலுமில்லை.

05.09.1991

பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் அவற்றை வெளியிடுபவர்களின் பெயர்கள் இல்லாமலே ஒட்டப்படுகின்றன. இவற்றை பொலிஸாரே ஒட்டி வருகின்றனர்.

06.09.1991

முல்லைத்தீவில் நடைபெற்று வரும் மோதலில் இராணுவத்தினரால் 226 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்திய அரசின் அணுகுமுறை ஏமாற்றமும், கவலையும் தருவதாக உள்ளது. ராஜீவ்காந்தியின் கொலையில் எமது இயக்கத்திற்குத் தொடர்பில்லை – பிரபாகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

70க்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் தோத்தலோயா தோட்ட அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் 2 சிங்கள ஆசிரியர்கள் மட்டுமே வகுப்புகள் நடாத்தி வருகின்றனர். தமிழ்மொழி போதிப்பதற்கு ஒரு ஆசிரியர் கூட இல்லை. பெயரளவில் தமிழ் வித்தியாலயமாக உள்ள போதிலும் சிங்கள மொழியிலேயே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

09.09.1991______________

முல்லைத்தீவில் இடம்பெற்ற மோதல்களில் 300 தமிழர்கள் அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையானது பொலிஸ் இராணுவம் அனைத்திற்கும் ஒரு தனி மனிதனை தலைவனாக்கித் தன்னிச்சையாக செயற்பட வழிவகுக்கிறது. அமைச்சர்கள்கூட இத் தனிமனிதனாலேயே நியமிக்கப்படவும், விலக்கப்படவும் முடியும்.

வடக்கேயிருந்து தாண்டிக்குளம் வரமுற்பட்ட சன நெரிசலில் சிக்கி 8 வயதுச் சிறுவன் கொல்லப்பட்டான்.

வவுனியாவில் தென்னிலங்கை செல்வதற்காகக் காத்துநின்ற ஆயிரக்கணக்கான மக்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 1 பெண்ணும், 1 சிறுவனும் கொல்லப்பட்டுள்ளனர்.

10.09.1991______________

இலங்கையில் அரசியல் நெருக்கடிகள் தோன்றியிருக்கிற போதிலும் முதலீட்டுக்கான சூழ்நிலை பாதிப்படைய மாட்டாது. நாட்டில் வன்முறைகள் இல்லாதிருக்குமானால் மேலும் முதலீடுகள் அதிகாகும். இலங்கையில் ஆங்கில அறிவுடையோருடன், படித்த தொழிலாளர்கள் இருப்பது முதலீட்டாளர்களுக்கும் பெரும் சொத்தாக அமைகிறது — ஜப்பானிய வர்த்தகத் தூதுக் குழு

11.09.1991______________

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாகக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத் தடையை மீறுவோர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவர் என ஜெயலலிதா மிரட்டியுள்ளார்.

மலையகத்தில் இதுவரை 104 தேயிலைத் தொழிற்சாலைகள் ஒன்றுக்கும் உதவாதமுறையில் மூடப்பட்டு, அவைகளிலுள்ள தளபாடங்கள், யந்திரங்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் யாவும் திருடப





www.tamilarangam.net

www.tamilarangam.net

பருகின்றன.

ஊவா மாகாணத்தில் 9ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றியுள்ளனர்.

இந்திய இராணுவத்திற்கு எதிரான சண்டையில் புலிகளுக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்பட்ட போதெல்லாம் இலங்கையரசு பெருமளவு நவீன ஆயுதங்களைக் கொடுத்துதவியதாகவும், 30க்கும் அதிகமான நவீனரக ஜப்பானியக் கார்களைக் கொடுத்ததாகவும் இந்தியாவில் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

12.09.1991

மாத்தறையில் நோய்வாய்ப்பட்டிருந்த தனது தாயுடன் தங்கியிருந்த இளம்பெண்ணை அவ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பாலியற் பலாத்காரம் செய்துள்ளனர். இது குறித்து அப் பெண் பொலிஸாரிடமும், வைத்திய அதிகாரிகளிடமும் முறையிட்டபோது அவ்விரு பகுதியினரும் பலாத்காரம் செய்த காடையர்களிடம் 1500,-ரூபா வாங்கிக்கொடுத்து அப் பெண்ணை வாயை மூடிக் கொண்டிருக்கும்படி சொல்லி அனுப்பிவைத்துள்ளனர்.

கொத்தமலை பிரதேசத்தில் தேயிலைத் தொழிற்சாலை ஒன்று எவ்வித அறிவித்தலுமின்றி திடீரென மூடப்பட்டதால் சுமார் 106 குடும்பங்கள் செய்த வேலைக்குச் சம்பளமுமின்றி பசியால் வாடுகின்றன.

13.09.1991

மட்டக்களப்பு மாவட்டத்தில் அப்பாவி இளைஞர்களும், யுவதிகளும், வயோதிபர்களும் கூட அரசபடைகளால் திடீர் திடீரென கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

ராஜீவ்காந்தியின் கொலையில் எமது இயக்கத்திற்குத் தொடர்பில்லை. சீக்கியர்கள் இதனைச் செய்திருக்கலாம். அல்லது வேறு குழுக்கள் தங்கள் தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்தியிருக்கலாம் - அமெரிக்க சஞ்சிகைக்கு பிரபாகரன்

14.09.1991

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் 6 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சட்டரீதியான அனுமதியின்றி இன்னொருவரின் கடவுச் சீட்டை வைத்திருக்கவோ, தபால் மூலமாக அல்லது வேறு நபர் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்புதலோ தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.

16.09.1991

முல்லைத்தீவுக் காட்டுக்குள்

நடைபெற்றுவரும் யுத்தத்தில் 2,500க்கு மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளன. தொடர்ச்சியான விமானத் தாக்குதலால் காட்டின் சில பகுதிகள் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கின்றன.

மணலாறுப் பகுதியில் 75 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

17.09.1991________________

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனான 3 சடலங்கள் மின் கம்பங்களில் கட்டப்பட்டவண்ணம் நேற்று மட்டக்களப்புக்கு வடக்கே காணப்பட்டுள்ளன. மற்றொருவர் குற்றுயிராக மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார்.

முல்லைத்தீவில் இதுவரை நடைபெற்ற மோதலில் 500க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

எம்.பி.க்கள் இன்று கூடுதலான சௌகரியங்களை அனுபவிக்கின்றனர். பெரும்பாலான எம்.பி.க்கள் தமது அந்தரங்கச் செயலாளர்களாக தமது மனைவிமாரையே நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். சில எம்.பி.மார்களும், மாகாணசபை உறுப்பினர்களும் கொழும்பில் வீடு கேட்பது மக்களுக்குச் சேவை செய்ய வல்ல. அந்த வீடுகளிலிருந்து கொண்டு தமது பிள்ளைகளைப் பெரிய கல்லூரிகளில் சேர்த்து பயில்விப்பதற்காகவே. மக்களுக்கு அரை அங்குல நிலம்கூட இல்லாதபோது எம்.பி.க்களின் மாமிமார்கள் உட்பட பல உறவினர்களுக்கும், இலிகிதர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் காணி கிடைத்துவிடுகின்றது.

தென் மாகாணத்தில் ஒரு கல்வியதிகாரி விண்ணப்பம் கோராமல், பரீட்சை எதுவும் நடத்தாமலே தனது மகனுக்கும், சகோதரியின் மகனுக்கும் ஆசிரியர் பதவி வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசிய இராணுவத்தை (TNA) அழிப்பதற்காக புலிகளுக்கு இலங்கையரசு ஆயுதம் வழங்கியது என்பதை இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

18.09.1991________________

கொழும்பு மகசின் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் களுத்துறைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாவியில் குறிப்பிட்ட பிரதேசத்தில் மீன்பிடிக்க முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் சுயதொழிலை இழந்த கசஉ குடும்பங்கள்



www.tamilarangam.net

www.tamilarangam.net

எவ்வித நிவாரணமுமின்றி பட்டினியால் பரிதவிக்கின்றன.

20.09.1991

புலிகளின் முகாம்களைக் கைப்பற்றுவதல்ல, புலிகளைக் கொல்வதே எமது நோக்கம் - கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர்

பொலனறுவை மாவட்டத்திலுள்ள முஸ்லீம் கிராமத்தில் புலிகளால் 11 முஸ்லீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்திய இராணுவம் வெளியேறும்போது அரசபடைகளுடன் சேர்ந்து புலிகள் TNAயைத் தாக்கினர். இன்று எமது ஆயுதப்படைகளுடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராக PLOT, EPDP, உறுப்பினர்கள் சண்டையிடுகின்றனர். UNP, SLFP, MEP, மு.கா போன்ற ஐனநாயகக் கட்சிகளுக்கும் இன்று ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன - பிரேமதாசா

பழுகாமத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

22.09.1991

இலங்கையுடனான இந்தியாவின் உறவுகள் அபிவிருத்தியடையும் எனவும், அகதிகளின் சுமையே தாங்க முடியாதளவுக்கு மென்மேலும் கஷ்டமாகி வருவதாகவும் இந்தியப் பிரதமர் பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கான பிரயாண ஒழுங்குகலை இந்திய அரசு பூர்த்தி செய்ததும் அகதிகள் இலங்கை திரும்புவது ஆரம்பமாகவுள்ளது. அகதிகள் திரும்புவதற்கான பிரயாண ஒழுங்குகள் இலங்கையினதும், இந்தியாவினதும் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றன.

24.09.1991

எமது பாராளுமன்ற உறுப்பினர்களைப் புலிகள் பலவந்தமாக ராஜினாமா செய்ய வைத்தனர். தற்போது யாழ்ப்பாணத்திலிருக்கும் எமது யாழ்மாவட்டக்குழுத் தலைவர் எமது உறுப்பினர்களை மறுநியமனம் செய்ய முடியாதவாறு புலிகளால் தடுக்கப்படுகிறார். பாராளுமன்றத்தில் எமக்கு பிரநிதித்துவம் தருவது அரசு எமக்கும் அளிக்கும் சலுகையல்ல. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஈரோஸ் உரிமை கொண்டுள்ளது - ஈரோஸ்

25.09.1991

1989ஆம் ஆண்டு யூன் மாதத்தில் புலிகள் இலங்கை அரசபடைகளுடன் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்ட முரணான தமிழ்த்தேசிய இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் எமது படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். எமது படையினரால் TNAயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புலிகள் இயக்கத்தினர் பயன்படுத்தப்பட்டனர். புலிகளின் உதவியுடன் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. புலிகள் இப்படி ஒத்துழைப்பு வழங்கிய காலகட்டத்தில் தான் தென்னிலங்கையில் JVPயினருக்கு எதிராக படைகள் முழுவதுமே ஈடுபட்டிருந்தன. தற்போது புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையில் EPDP, PLOT, TELO ஆகிய இயக்கங்கள் அரசுடன் சேர்ந்து ஒத்துழைப்பதால் அவைக்கு ஆயுதங்களும். ஏனைய உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன —. பாதுகாப்பமைச்சர்

---

27.09.1991

பேச்சுவார்த்தை நடாத்த யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்துப் புலிகள் தொண்டமானுக்கு அதிகாரபூர்வமாக கடிதம் அனுப்பியுள்ளனர்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான தொடர்பு ஈரோஸ் எம்.பி.க்கள் பாராளுமன்றத்திற்கு வந்து ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு வாக்களிக்கும் முறையின் மூலம் விரைவில் அம்பலமாகத்தான் போகிறது - அநுரா

29.09.1991

ஈரோஸ் சார்பில் யாழ் மாவட்டத்திற்கு யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரான சிவஞானம் உட்பட 6 புதிய எம்.பி.க்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அவசரகால நிலையை நீடிப்பதற்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் வாக்களித்துள்ளனர்.

30.09.1991

இலங்கை அரசுடனான நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு நாம் இணங்கியுள்ளோம். அரசுக்கும் எமக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் கடிதங்கள் மூலமாக அல்லாது நேரடியாக இடம் பெறுவதையே நாம் விரும்புகிறோம் - புலிகள்

முல்லைத்தீவில் நடந்த மின்னல் தாக்குதல்களில் 800க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

---

மன்னிப்புக் கோருகிறோம்: "கியூபா; இன்னும் எத்தனை காலம்?" என்ற தொடரை போதிய பக்கங்களின்மையால் தொடர்ச்சியாகப் பிரசுரிக்க முடியவில்லை. - கடலோடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

( 16 ஆம் பக்கத் தொடர்ச்சி )

தன்மையும் எல்லோரிடமுமே இருக்கின்றன. ஆனால் ஈழப் போராட்டத்தைச் சார்பாக வைத்து யாரோ சிலரின் நலன்களுக்காக அரங்கேறுகின்ற அனைத்துக் கொலைகளும் மறுத்துரைக்கப்படவேண்டியவை, கண்டிக்கப்பட வேண்டியவை என்பதை ஒருசிலராவது உணர முற்படுகின்றனர். அவர்கள் இந்தப் புலித் தலைமைகளின் பின்னணிகள் என்ன? கொள்கை என்ன? நோக்கமென்ன? என்ற கேள்விகளின் பதிலினூடாக மக்கள் நலனை எழுத்துக்களாலாவது பேண விரும்புவோர். ஆனால் மறுபக்கங்களில் தெரிந்த மாக்ஸிஸத்தின் புரியாத பஞ்சத்தால் உருவான புதிய விளக்கங்கள்.

கவிழ இருக்கும் பிரேமதாசாவுக்கு பன்னிரெண்டு ஈரோஸ் எம்.பி.க்களை- புலிகள் உட்பட- வைத்து முண்டு கொடுக்க முயல்வதும், கொழும்பினூடான ஆயுதப் பரிமாறல்களும், இன்னும் பிறவும் தினந்தினம் வெளிவருகின்ற சினிமாக் கிசுகிசுக்களா என்ன!. ஏகாதிபத்தியங்களால் மூன்றாமுலகங்களில் வளர்த்து விடப்பட்டிருக்கின்ற கொலைப்பட்டாளங்களில் இந்தப் புலிகளும் ஒன்று என்பதை ஏற்றுக் கொள்ளாமல் ஆனையிறவு தாக்குதலின் போர்த் தந்திரோபாயங்களை ஆராய முனைகின்றோம். ஆனால் நாளை ஆனையிறவு முகாமில் இராணுவத்துடன் புலிகளும் சேர்ந்திருந்து தமிழர்களை வேட்டையாட முடியும் என்ற உண்மையை அறிய எமக்கு முடியவில்லை.

சிறு துவக்கால் படுக்கையில் வைத்துச் சுடப்பட்ட மைக்கல் என்ற இளைஞனின் கொலையினூடாக ஈழத் தமிழர்களுக்குள் விதைக்கப்பட்ட ஒரு விதையானது றிமோட் கொன்றோல்களால் பெரிய பெரிய தலைகளைக்கூடச் சரிக்கட்டுகின்ற அளவிற்கு மரமாகிவிட்டதை எண்ணித்தான் இன்று அந்த ஒருசிலர் கவலை கொள்கின்றனர்.

– டானியல்

*　　　*　　　*

தூண்டிலுக்கு "மனித நேசம்" பற்றிய சர்ச்சை குறித்து வாசகர் சுகன் எழுதிய கருத்தையும், கடலோடிகளின் பதில்களையும் நாம் மிகவும் சிரத்தையுடன் படித்தோம். மனிதநேசம் பற்றிய சர்ச்சை என்பதில் ஒரு திருத்தம். மனித நேசிப்பிற்கான முன்னகரும் கருத்து என்கிறேன்.

இன்றையவுலகம் ஒடுக்கப்படுபவர்களையும், ஒடுக்குபவர்களையும் கொண்டியங்குகிறதென்ற நிலையில் நாம் மனித நேசிப்பைப் பற்றி மிகவும் குறுகிய முன்நோக்கில் புரிந்துகொண்டும், விபரீதமான முறையில் அது பற்றிப் பேசி

www.tamilarangam.net

யும், எழுதியும் வருகின்றோம். இவ்வடிப்படையில்தாம் புலிகளும் ஏனைய கடைந்தெடுத்த துரோகக் குழுக்களும் தாம் ஒடுக்குபவர்களின் விடுதலைக்காகப் போராடுவதாகவும், ஒடுக்குபவர்களை ஒழிப்பதாகவும், தாம் சார்ந்த வர்க்கத்தை நேசிப்பவர்களாகவும் கூறுகிறார்கள்.

இங்கு மனித நேசம் வர்க்கம் சார்ந்ததா, சாராததா என்பதல்ல பிரச்சினை. வர்க்க விடுதலையென்ற பேரால் நடாத்தப்படும் கொலைகளும், அதையொட்டியெழும் கொலை செய்யும் உளவியல் விகாரம் மானுட நேசிப்பைத் தூளாக்கி சக மானிடர்களையெல்லாம் தமது கருத்துக்கு, தமது செயற்பாட்டுக்கு முரணாக நிற்கக் கூடியவர்களையும், தமக்கு அச்சத்தை விளைவிக்கக் கூடிய முறையில் தோன்றுபவர்களையும் நோக்கித் திரும்பிவிடுகிறது. இதனால் நிகழ்வது கொலையைத் தவிர வேறொன்றுமில்லை.

இன்றைய ஈழ-இலங்கை நிலைமைகளைப் பற்றி யோசிக்கும்போது எமது சமூகத்தில் இன்றைய "கொலைவெறி உளவியல் மேலாண்மைக்கு" பலவித உறவுகள் இருப்பினும் அடிப்படைச் சிந்தனையில் மனிதநேசிப்பைப் பற்றிய தவறான புரிதலும் காரணமாகும். "எம்மை ஒடுக்குபவனைக் கொல்வோம்" என்று எந்த தத்துவமும் போதிக்கவில்லை. வர்க்க பேதமற்ற சமுதாயத்தை மலர்விப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட சித்தாந்தங்கள் மனிதப் படுகொலையை வெறுத்தே தமது விமர்சனங்களை வைக்கின்றன. அதன் நோக்கே உன்னதமான சமுதாயத்தையும், பண்பாட்டையும் உருவாக்குவதே!. எனினும் அது ஒடுக்கப்படும் வர்க்கத்திற்காக மட்டுமல்ல ஒடுக்கும் மனோபாவத்திற்குள் உட்பட்ட மானுடர்களை மாற்றியமைப்பதற்கான உன்னத நோக்கோடுதாம் தன் முன் நகர்வைத் தாங்கி நிற்கிறது.

அதன் உள்ளார்ந்த தன்மை ஒடுக்குபவர்களை நிர்மூலமாக்க வேண்டியதால் மட்டும் ஒடுக்கப்படுபவர்களை நேசிக்க வேண்டுமென்று கூறி நிற்கவில்லை. சக மனிதனை மனிதனாக நேசிக்கக் கற்றுக்கொள்ள வைக்கும் சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக நிற்கும் உடமை வர்க்கச் சூழலில் ஒடுக்குமுறை மனோபாவத்திற்குள் மூழ்கி நிற்கும் அனைத்து மக்களையும் ஒழுங்குபடுத்தவே தேவையேற்படும் பட்சத்திலும், அதன் தவிர்க்கமுடியாத மனிதநேசிப்பால் கருத்தியல் போராட்டத்தை வலுவாக்கிக் கொல்லுதலைக் கூடியவகையில் குறைக்க முனைகிறது.

ஒடுக்குபவர்களையோ ஒடுக்கப்படுபவர்களையோ சார்ந்து அவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனித நேசிப்பைப் போதிக்கவி ல்லை. மனிதர்களைச் சார்ந்து நின்றே அவர்களை தனியுடமைச் சூழலிலிருந்து விடுவித்த உன்னதங்களைப் படைக்க முனைகிறது. எதிர்கால நலனுக்கான நகர்வில் அதன் இலக்கு உன்னதமானது. ஆனால் சுகன் என்பவர் குறித்துரைத்த மனிதநேசமானது ஒடுக்குபவர்களுக்காக வருந்தியழு என்பதல்ல. அதன் சாரத்தை ஈழ-இலங்கை நிலைமைகளுடன் பொருத்திப் பார்க்காத தவறு கடலோடிகளிடமுண்டு.

"கொலையைத் தவிர வேறு எதிலும் விருப்பமில்லாத பயங்கரவாதக் குழுக்கள், கொள்ளைக் கோஷ்டிகள், தனிக் கொலைஞர்கள் வளர்த்துவிடப்படும் எமது சூழலில் -மூன்றாம் உலகநாடுகளில்-மனித இருத்தலுக்கான சாத்தியம் இன்னும் எவ்வளவு காலம் நம்பிக்கையளிக்கக் கூடியது." என்ற அவரது ஏக்கம் இன்றைய ஈழ-இலங்கை நிலைமைகளின் விபரீதங்களால் முகிழ்த்தது என்றதனால் கேள்விக்குரியதல்ல. அல்லது ராஜீவுக்காக கண்ணீர் அஞ்சலி எழுது என்பதுமல்ல.

சக மானிடர் மரித்துவிட்டார் என்றவுடன் கண்ணீர் மல்கும் ஒரு சமுதாயம் எப்படி கொலைவெறி பிடித்த அலைகிறதென்ற கேள்விக்கு விடைகாண வேண்டியவர்கள் நாம். இந்நிலையில் நாம் இறந்து தாம் சாவு எப்படியானது என்று அறியவேண்டியதில்லை.

கொலைகாரர்களைப் பாதிக்காத மனிதாபிமானம் அவர்களால் கொல்லப்படுபவர்களை கணக்குப் பார்க்கத்தாம் லாயக்கென்றால், கொலைகாரர்களைப் பாதிக்கின்ற மனிதநேசம் புலிகளிடமும் உண்டு. அப்படியான நிலையில் புலிகளை எப்படிப் பார்க்கலாம்? இங்கு கொலைகாரர்களை பாதிப்படையச் செய்து ஒடுக்குமுறைச் சூழலை இல்லாதொழிக்கிற சூழலில் தவிர்க்க முடியாமல் ஒடுக்குபவர்களை-கொலைகாரர்களை பாதிப்படையச் செய்கிறதா? எது விடுதலைக்குரிய பாதை?

இன்றைய ஈழ-இலங்கை அராஜக கொலைவெறிச் சூழலில் நவீன ஈழ-இலங்கைச் சிந்தனையானது ரெஜி சிறிவர்த்தனா போன்றவர்களுக்கூடாக தன்னை வெளிப்படுத்திக்கொண்டு நகருகிறது.

பயங்கரவாதத்தின் ஊற்றுமூலமான ஒடுக்குமுறை அரசு தற்போது தன் தேசிய எல்லைகளைக் கடந்து விரிந்துவிட்டது. அதைத் தகர்த்த பின்புதான் மனிதாபிமானத்தைத் தேட முடியுமென்று கூறிக்கொண்டு நடக்கும் மனிதப் படுகொலைக்கு தயவுசெய்து வருவதற்கான முன்னகர்விற்கு ஒடுக்கப்படும் வர்க்கம் காரணமாக இருப்பது கவலைக்

www.tamilarangam.net

குரிய விடயம்தான்.

– ப.வி.ஸ்ரீரங்கன்

*　　*　　*

முதலில் . கலம் 44இல் சுக னின் விமர்சனம் குறித்தான எமது கருத்தில் "... ராஜீவ்காந்தி கொல் லப்பட்டதும்தான் நாடே கலங்கு தென்றும், மனிதநேயம் செத்து விட்டதென்றும், கண்டிக்கப்பட வேண்டிய கொலையென்றும் இக் கொலைஞனின் கூட்டாளிகள் பதறி யடிப்பார்கள் என்றால் ராஜீவ் போன்றவர்கள் செத்துக் காட்டட் டும் சாவு எப்படியானதென்று..." என்று குறிப்பிட்டிருந்தோம். இக் கருத்தை "இப்படியானவர்கள் செத் துக்காட்டட்டும்..." என்று எழுதி விட்டதில் . மனிதாபிமானம் பற் றிக் கதைப்பவர்கள் செத்துக்காட் டட்டும் என்ற தொனியே இருப்ப தாகப் பெரும்பாலான வாசகர்கள் தெரிவித்திருப்பதால் - எமது கரு த்து அதுவல்ல எனினும் - மாறான கருத்தை வெளிப்படுத்தும் முறையில் எழுதியதற்காக வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

வர்க்க முரண்பாடுகள் காரண மாகவோ, இனமுரண்பாடுகள் கார ணமாகவோ, 'இன்னோரன்ன' கார ணமாகவோ கொலைகள் நாளாந்த நிகழ்வுகளாகிக் கொண்டிருக்கின் றன. ஒடுக்குபவர்கள் ஒடுக்கப்படு பவர்களிடமிருந்து தம்மை விடுவித் துக்கொள்ள போராடும்போது இட ம்பெறும் தவிர்க்கவியலாக் கொலைகள் விருப்பத்தின் வெளிப் பாடல்ல. எந்த அடிப்படையைக் கொண்டிருந்தாலும் கொலை குறி த்து மகிழ்ச்சியடைய முடியாது.

ராஜீவ் கொலையின் மூலம் மக் களின் அடிப்படைப் பிரச்சினை தீரப் போவதில்லை. அதிகாரத்தி லிருப்பவர்களை இல்லாமற் செய்வ தற்குப் பதிலாக அதிகார அமைப்பு முறையை மாற்றுவதன் மூலமே அடி ப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

ராஜீவின் கொலை சமூகநலனை அடிப்படையாக வைத்து நடைபெற வில்லை. அதிகாரவர்க்கம் தமக் குள்ள முரண்பாடுகளால் மோதிக் கொண்டிருப்பதன் விளைவே இக் கொலை எனக் கருதுகிறோம். இத் தனிமனித கொலைகள் பிரச்சி னைகளைத் தீர்த்துவிடும் என்ற மாயைக்குள் மக்களை இட்டுச் செல் கின்றது என்பதை வெளிக்கொண ரும் அதேவேளை ராஜீவ் கொலை க்குப் பயன்படுத்தப்பட்டவர்கள் ஏன் இக் கொலையைச் செய்யத் தூண் டப்பட்டார்கள் என்ற காரணங்களை யும் கவனத்திலெடுக்க வேண்டும். இந் நிலையில் அதிகாரவர்க்கம் தன்னைத் தானே அழித்துக்கொள் வதைப் பார்த்து வருந்துவதோ கண்டிப்பதோ அல்ல, மாறாகத் தனி மனித கொலைகள் மூலம் மாயைக் குள் இட்டுச் செல்லப்பட்டுக் கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*டிருக்கும் சமூகத்திற்கு தனிமனித கொலைகளின் பின்னணிகளையும், நாம் செய்ய வேண்டியவற்றையும் தெளிவுபடுத்துவதே அனைவரின் கடமையாக இருக்க முடியும் என்பது எம் கருத்து.*

*– கடலோடிகள்*

* * *

தூண்டில் கலம் 45ஐ வாசித்த பின், தூண்டிலின் அடுத்த கலத்திற்காகக் காத்திருக்கத்தான் வேண்டுமா? என்னும் கேள்வி மிகப் பூதாகரமாக என்னுள் எழுந்துள்ளது.

தேசத்தின் குறிப்புகள் முதல் பாகம் விடுதலைப் புலிகளின் செய்திக் கதிர் படிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. இன்றைக்கு நாங்கள் வாய் திறந்து உண்மையைப் பேசவோ, எழுதவோ முடியாத நிலையில் இருக்கும்போது, புலிகள் எங்கு மறைந்து நின்றார்கள், எப்படித் தந்திரமாக ஸ்ரீலங்கா ஆமியைத் தாக்கினார்கள் என்பது மிகவும் அவசியமாகவும், அவசரமாகவும் தேவைதானா என்று எண்ணத் தோன்றுகிறது.

எங்களைப் போல் யார் நின்று போராடுகின்றார்கள் என்று அனைத்துப் போராட நினைப்பவர்களையும் போராட்டம் பற்றி வேறொரு கருத்து நினைத்தாலே புதைகுழிக்குள் தள்ளும் இவர்களின் போராட்டம்(7) இன்று அவசியம்தான் என்று அனைவரையும் நம்பவைக்க முயன்று கொண்டிருப்பவர்களிற்கு தூண்டிலும் ஒகோ! ஒகோ!! என்று இப்படி வக்காலத்து வாங்கியிருக்கிறது.

இலங்கையில் இருந்து வந்த `திசை' பத்திரிகை ஏதோ... காற்றில் அடிபட்டுப் போனமாதிரி தூண்டிலும் ஏதாவது... நடந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மற்றது, உலகத் தமிழர் இயக்கம் = தமிழீழ விடுதலைப் புலிகள் என்று நிறுவுவதற்கு, எடுத்துக் கொண்ட தரவுகளில் இருந்து, எடுகோள்கள் அது, இது என்று மிக நீண்ட பக்கங்களைச் செலவழித்து இருப்பதைப் போன்ற ஒரு உணர்வு.

`விடி வெள்ளி தலைமறைவாகும்' என்னும் சாந்தனின் சிறுகதை பயனுள்ளதாக இருந்தது.

நகைச்சுவை ஒரு புதுவடிவத்தை எடுத்துள்ளது. என்றாலும் `இன்னன்னாவின்' நகைச்சுவையே தனி ரகம்தான்.

ரஜீன்குமாரின் கவிதை தரமானதாக இருந்தும், கவிதையின் தலைப்பு அதன் தாற்பரியத்தை குறைத்த மாதிரி இருக்கின்றது.

ராஜீவ்காந்தியின் கொலை

www.tamilarangam.net

சம்பந்தமான வாசகர் கடிதத்திற்கு தூண்டில் மிகவும் இறுமாப்புடன் பதில் அளித்திருப்பது போல் தெரிகின்றது.

புலிகள் தங்கள் கோட்பாடுகளின்படி கொலை செய்கின்றனர். அரசும் தன்னுடைய கோட்பாடுகளின்படி கொலைகளைச் செய்கின்றது.

புலிக்கோட்பாடு=அரசு கோட்பாடு. தூண்டிலுக்கும் இது பற்றிச் சிலகோட்பாடுகள் உள்ளதுபோல் தெரிகின்றது. இதுபோல்தான் ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகள் பலதுக்கும் இருந்தால்...

ஐயோ! பாவம் மக்கள்??

தேசத்தின் குறிப்புகள் பக்கம் 50இல் குறிப்பிட்டுள்ளதுபோல் புலிகள் தொடங்கிய இடத்தைத் தவிர வேறெதையும் ஞாபகத்தில் வைத்துள்ளதாகத் தெரியவில்லை. தூண்டிலுக்கு அது கூட...

– லஷ்மி

*　　*　　*

கலம் 45இல் தேசத்தின் குறிப்புக்களில் பிரஜைகளின் கருத்துகளுடன் எனக்கு நிறையவே உடன்பாடுகள் உள்ளன. பிரஜைகளின் கருத்துகள் பற்றியும், நூறு பூக்கள் விவாதம் பற்றியும் ஒவ்வொரு கலம் வெளிவந்த பின்பும் சில விசயங்களை எழுதுவதும், பின்பு அடுத்த கலத்தில் பிரஜைகள் எனது கருத்தையே மிக இலகுவான தமிழ் சொற் பிரயோகம் மூலம் பதிலாகத் தருவதும் என்னை மேலும் உற்சாகப்படுத்துகிறது.

தமிழ் இயக்கங்களிலிருந்து காலத்திற்குக் காலம் சரியான, நேர்மையான சக்திகள் விலகிச் செல்லும்போது அவ்வவ்வியக்கத் தலைமைகளால் அவர்களின் தலைகள் துண்டிக்கப்படுவது தவறுவதில்லை. இதிலிருந்து தப்பியவர்களில் நானும் ஒருவன். நான் நினைப்பதைச் சொல்லக்கூடிய நிலையைத் தூண்டில் உருவாக்கியுள்ளது. எனது அனுபவத்திலொன்றையே சென்ற கலத்தில் பிரசுரமான சிறுகதையாகத் தந்திருந்தேன். உலகெங்கும் சிதறி வாழும் எமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் உண்மை உழைப்பாளிகளை ஒன்று சேர்க்கும் ஒரு பத்திரிகையாகத் தூண்டில் வளர்கிறது. இவ் வளர்ச்சி தூண்டிலில் இடம் பெறும் விவாதத் தொடர்கள் மூலம் கிடைத்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

சென்ற கலத்தில் ஒரு வாசகர் தூண்டில் தனது சுய தேடலை முடித்துக்கொண்டு தன்னை 50/60 சொற்களுக்குள் அடக்கக்கூடிய கோஷ்டி வாதத்திற்குள் திணித்துக் கொண்டுள்ளதோ என ஐயப்படுவதாக எழுதியுள்ளார்.

தூண்டில் சுயதேடல் ஒன்றைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யவில்லை. மக்களின் விடுதலை குறித்தான விவாதத்தையே நடாத்தி வருகிறது. ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் ஒவ்வொருவரது கருத்துகளையும் முழுமையாகப் பிரசுரித்தும், அதற்கான கடலோடிகளினதும், ஏனையோரினதும் பதில்களையும் பிரசுரித்தும் வருகிறது.

கோஷ்டிவாதம், குழுநிலைவாதம் என்ற சொற்களைப் பாவிப்பவர்கள் யார்? இவர்கள் கடந்தகால அரைகுறை மாக்ஸிஸ்டுகள் அல்லது மார்க்ஸிஸ குழுக்களினூடாக தம்மைப் பிரபல்யப்படுத்தியவர்கள். இவர்கள் நடைமுறையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி கவலையற்றவர்கள். தம்மை முதன்மைப்படுத்துபவர்கள். இன்று புலம் பெயர்ந்த இடங்களில் கலை, இலக்கியத் துறைகளில் உத்திகளைப் புகுத்தி தங்களை மேதைகள் எனக் கூறிக்கொள்பவர்கள். இவர்கள் ஒன்றில் புலிகளுக்கோ அல்லது மற்றைய இயக்கங்களுக்கோ அல்லது இலங்கை, இந்திய அரசுகளுக்கோ சேவகம் செய்யும் புத்திஜீவிகளே. இவர்களின் சீனி பொதிந்த தோட்டாக்களின் சூடுகள் மிகவும் ஆபத்தானவை.

– சாந்தன்

*　　*　　*

ராஜீவ் காந்தி செத்தாலும் செத்தான். தலையைப் பிய்ச்சுக் கொண்டு நாங்கள் சாகலாம் போலிருக்கு. அவ்வளவுக்கு ராஜீவ் கொலை தொடர்பான விமர்சனங்கள், விவாதங்கள் என்னைக் கொண்டுபோய் விட்டிட்டுது. ஆளுற ஆக்களாலை நாளாந்தம் எத்தினை பேர் செத்திச்சினம்? எங்கடை விடுதலைப் போராட்டத்தாலை நாங்கள் எத்தினை தலையளை இழந்தனாங்கள். அந்த நேரத்தில எங்கடை மனிதாபிமானம் பற்றிய பார்வையை யாரிட்டை அடகு வைச்சிருந்தனாங்கள்? இதுக்கு அன்று மனிதநேசம் பற்றிக் கதைக்காமல் விட்டதாலை இன்றைக்கும் கதைக்கக் கூடாதோவென்டு இவையள் தத்தவார்த்த விளக்கம் தரக் கூடும். ஏன் கணக்கப் போவான்? ராஜீவ் காந்தியுடன் முரண்பட்ட சத்தியன் (அவங்கள் யாரெண்டு நிச்சயமாய்த் தெரியாட்டியும் சனங்களின்ரை நலனைச் சார்ந்தவை இல்லையெண்டு நல்லாத் தெரியும்.) ராஜீவாலை பாதிக்கப்பட்டவையின்ரை உணர்வுகளை வைச்சு அவையளை ராஜீவின்ரை கொலையிலை பலியிட்டிருக்கினம். இதுமட்டுமே? இந்தச் சம்பவத்திலை ஒண்டும் தெரியாத அப்பாவிச் சனங்கள் கொல்லப்பட்டிருந்தும் எங்கடை மனிதநேசம் ராஜீவ் காந்தியிலை மட்டும் குவிக்கப்படுறதின்ரை காரணம் என்ன? சாவுகள் குறிச்சு சந்தோசப் பித்தேறிக் கூத்தாட முடியாதுதான். ஆனால் இன்டைய சமூக முரண்பாடுகள்தான் ஐயா மனிதநேசம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிச்ச எங்கடை பார்வையை பக்கச் சார்பாக்குது. இன்னடைய எங்கடை பக்கச் சார்பான மனிதாபிமானத்திற்குள்ளாலை நாங்கள் நடத்துற போராட்டம் முழு மனிச குலத்தின் மனிதநேசத்திற்கானதாய் இருக்க வேணுமெண்டு நினைக்கிறன். உண்மையைச் சொன்னால் என்ன? ராஜீவ் செத்ததிற்கு எனக்கு அழுகை வரவேயில்லை. இனியும் ராஜீவின்ரை கொலைக்கு அழ வேணுமெண்டு சொல்லுவீங்களாயிருந்தால் எனக்கு கிளிசறினை பாவிக்கிறதைத் தவிர வேறை வழியில்லை. ராஜீவ் செத்ததை வைச்சு நடக்கிற சர்ச்சைகள் போற போக்கைப் பார்த்தால் அவனை அழைத்து வந்து, ஆட்சியில் அமரவைத்து, ஆளடா ஆளு என்று (கொல்லடா கொல்லு என்று) ஆள வைத்துப் பார்க்க வேணும் போலை கிடக்கு.

– சு.தெய்வேந்திரன்

# நாயன்மாரின் காம வெறி !!!

"பெண்ணகத்து எழில் சாக்கியப் பேய் அமணை
தெண்ணாற் கற்பழிக்கத் திருவுள்ளமே"
(சம்பந்தர் தேவாரம்)

என்று ஸ்ரீலறாவாயரான சம்பந்தப் பெருமான் (நாயன்மார்களிலேயே வயது குறைந்தவர்!) அருள் ஒழுக ஒழுகப் பாடுகிறார். இதன் அர்த்தம் தெரியுமோ?

சமயப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் சைவத்திற்கு எதிரான சாக்கிய, சமணப் பெண்களைக் "கற்பழிக்க" எல்லாம் வல்ல பெருமானிடம் திருவுள்ளம் தேடுகிறார் சம்பந்தர்.

நாயன்மாரே இப்படியென்றால்?

(மண்ணும் மனித உறவுகளும் – கோ. கேசவன் எழுதியதிலிருந்து)

*சரிநிகர், மாதம் ஒருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.*

*எல்லாத் தொடர்புகளுக்கும்;*
*ஆசிரியர்*
*'சரிநிகர்'*
*6, அலோசாலை,*
*கொழும்பு – 3.*

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே – பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




"ஆனையிறவு தாக்குதல் நடந்து முடிந்த கையோடை வெலியோவாவிலை துடங்கியிட்டாங்கள். பிரேமதாச மீது கொண்டுவரப்பட்டிருக்கிற <<இம்பீச் மென்ற்>> அமளியிலை அதைப் பற்றி ஆரும் கதைப்பார் இல்லை..." என்று தொடங்கினேன் நான்.

"முதல்லை நீ உந்த வெலியோயா எண்டு சொல்லுறதை நிப்பாட்டு. அதுக்குப் பிறகு அதைப் பற்றிக் கதை.." என்று சீறினார் நண்பர்.

"என்னடாப்பா இது இண்டைக்கு துடக்கமே சூடாயிருக்கு" என்றேன் நான். நண்பரின் சீற்றத்திற்கு எனக்குக் காரணம் விளங்கவில்லை. "ஏன் வெலியோயா எண்டு சொல்லுறதிலை என்ன பிரச்சினை?"

"வெலியோயா வெலியோயா எண்டு உங்களைப் போலை பத்திரிகைக்காறங்களும் எழுதவெளிக்கிட்டால் இன்னும் கொஞ்சநாளிலை அது சிங்களவற்றை இடம்தான் எண்டு சாதிக்கிறவங்களுக்கு வசதியாயிருக்கும். ஏற்கெனவே பட்டிப்பளை மாதிரி எத்தினை தமிழ்ப் பேருகளை சனம் மறந்திட்டுது..."

"அட.. அதே.." என்று இழுத்தேன் நான்.

"என்ன அட அதே எண்ணுறாய்.. உனக்கு வெலியோயாவின்ரை தமிழ்ப் பேர் தெரியுமோ?"

"தெரியும். மணலாறு"

"அப்ப அப்பிடிச் சொல்லன். பிறகேன் வெலியோயா எண்டு சிங்களத்திலை சொல்லுறாய்?"

"ஒரு பேரிலை என்ன கிடக்குது. எங்களுக்கு விசயம்தானே முக்கியம்"

"பேரிலைதான் விசயமே கிடக்குது. தமிழ்ப் பகுதியான மணலா

www.tamilarangam.net

றிலை கொண்டுபோய் சிங்களச் சனத்தைக் குடியேற்றிப்போட்டு அதுக்கு வெலியோயா எண்டு பெயரும் வைச்சிருக்குது அரசாங்கம்! மணலாறுக்குச் சரியான மொழி பெயர்ப்பு வெலியோயா. வெலி என்றால் மணல். ஓயா என்றால் ஆறு. நாங்களும் அவன் வைச்ச பேரையே சொல்லிக் கொண்டிருந்தம் என்றால் நிலைமை எங்கு போய் நிக்கும் தெரியுமா? வெலியோயா எண்ட சிங்களக் கிராமத்தின் தமிழ் மொழிபெயர்ப்புத்தான் மணலாறு எண்டு சொல்லத் தொடங்கியிடுவாங்கள். உப்பிடி எத்தினை கிராமங்களின்ரை தமிழ்ப் பேர் இப்ப மறைஞ்சு போச்சுது? ஏற்கெனவே வல்லிபுரம் தங்கத்தகடுப் புரளியை கிளப்பிவிட்டிருக்கிறாங்கள்"

"சரி விடு. பிழைதான். விசயத்திற்கு வாவன். இப்ப அங்கை நடக்கிற சண்டையைப் பற்றி ஒரு கதையையும் காணேல்லை.. இஞ்சத்தப் பேப்பர் எல்லாம் இம்பீச்மென்றைப் பற்றி (Impeachment) எல்லே எழுதித் தள்ளுது..."

"இப்ப அதுகளுக்கு அதைவிட முக்கியமானது இதுதான்.. அங்க படுபயங்கரமான அழிவு வேலையள் நடக்குது. அது சிறப்பாக நடக்கிறதும் ஒருவகையிலை பிரேமதாசவின்ரை கோஸ்டிக்கு நல்லது என்பதால் அதை தொடர்வதற்கான உள்மட்ட ஆதரவு தீவிரமாக வழங்கப்படுகிறதாம்! அங்கை பொம்பர்கள் பரவலாக எரிகுண்டுகளை வீசித் தள்ளுகின்றன. காடுகள் எல்லாம் எரிச்சுத் தள்ளுப்படுகிறது. மணலாற்றிலை இருந்து முல்லைத்தீவுப் பக்கமாக இராணுவம் முன்னேறிப் போகிற முயற்சியிலை இதுவரை 600க்கும் மேற்பட்ட சனம் செத்துப் போச்சாம். புலியளின்ரை முகாமை பிடிக்கிறதும் பக்ரரியை எரிக்கிறம் எண்டு சொல்லிக்கொண்டு இராணுவம் செய்யிறதெல்லாம் வடக்கையும், கிழக்கையும் இணைக்கிற தரைப் பகுதியை சுடுகாடாக்கி தமிழ்ச் சனங்களை அங்கை இருந்து விரட்டுறதுதான்..."

"அரசாங்கத்தைப் பொறுத்தளவிலை இதுதான் ஆணையிறவை விடவும் அதுக்கு முக்கியமானதாயிருக்கும் எண்டு நினைக்கிறன்.."

"ஓம்... இந்த யூ.என்.பி. அரசாங்கத்தின்ரை அடிப்படைத் திட்டமே வடக்கு, கிழக்குக்கு இடையிலான பூகோள இணைப்பை முழுமையாகத் துண்டிப்பது. வடக்கையும், கிழக்கையும் துண்டாடும் விதத்தில் ஒரு வரிசையான குடியேற்றத்தை முல்லைத்தீவிலிருந்து அநுராதபுர மூடாக மன்னார் வரை உருவாக்குவது. இதற்கு ஏற்ற விதத்தில் அது கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிட்டு முயன்று வருகிறது. தற்போதுள்ள பூகோளத்திலான தொடர்பு துண்டிக்கப்பட்டு இடையில் மணி

தப் பாதுகாப்புக் கோட்டையாக இவற்றை உருவாக்குவது. இந்தத் திட்டம் கிழக்கிலும் ஆங்காங்கே உருவாக்கப்பட்டுள்ளது. குடியேற்றங்களை தமிழ் எல்லைகளைத் துண்டாடும் விதத்தில் உருவாக்குவதன் மூலம் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசத்தை துண்டுதுண்டாக்குவது இந்தக் குடியேற்றத்தை உருவாக்கிய யூ.என்.பி. முதாதையர்களின் நோக்கமாகும். பதவியாக் குடியேற்றத்தின்போது டி.எஸ்.சேனநாயக்க இந்தக் <<கோட்டைத் திட்டம்>> பற்றித் தெளிவாகத் தெரிவித்திருந்தான். முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, அநுராதபுரம் எண்ட நாலு மாவட்டங்களும் இணையிற பகுதியளிலை இப்ப கிட்டத்தட்ட முழுதாகக் குடியேற்றம் முடிஞ்சிது. வவுனியா சிங்கள டிவிசன். திருகோணமலை, முல்லைத்தீவு குடியேற்றங்கள் என்பவற்றால் முல்லைத்தீவு, திருகோணமலை தமிழ்க் கிராமங்களினுடான தொடர்பு துண்டாடப்பட்டிட்டிது. அதை மேலும் பலமாக்கிற வேலையைத் தான் அவன் செய்து வருகின்றான் இந்தச் சண்டையிலை..."

"ஆனால் அவர்களால் அதை எவ்வளவுக்குச் செய்ய முடியும்?"

"அவர்கள் நினைத்த வேகத்தில் அதைச் செய்ய முடியாமல் போனதுக்கு முக்கிய காரணம் தமிழ் தேசியவாதத்தின் எழுச்சி. அது இந்தப் போக்கை ஓரளவுக்கு உடனடியாக இல்லாவிட்டாலும் பிந்நாளில் இனம் கண்டுகொண்டது. ஆயினும் அது இதை ஒரு முக்கியமான அம்சமாக கருதித்தான் போராட்டத்தை வகுக்கவில்லை. போகிற போக்கில் இதையும் ஒரு அம்சமாக அது எடுத்துக்கொண்டது. அவ்வளவுதான்... ஆனால் 60களின் பிற்பகுதியிலும், 70களிலும் இது மிகவும் முக்கிய



www.tamilarangam.net

மான ஒன்றாக உணரப்பட்டது. எப்பிடியோ புலிகளை ஆனையிறவில் வெற்றி கொண்டது ஒருவகை வெற்றி என்றபோதும் அந்த முகாமைத் தொடர்ந்து அங்கே வைத்துக்கொண்டு அதைப் பாதுகாக்க சக்தியைச் செலவளிப்பதைவிட இந்த மாதிரி யுத்த தந்திர ரீதியில் முன்னேறுவதுதான் அரசின் நீண்ட கால நலன்களுக்கு உகந்ததாகும். ஆனையிறவில் புலிகளை அரசு பலவீனமடையச் செய்தது உண்மை என்றபோதிலும் அது முற்று முழுதான வெற்றி என்று சொல்லமுடியாது. ஆனால் மணலாறிலிருந்து முல்லைத்தீவு வரையான பகுதியை கிளியர் பண்ணினால் அது பெரிய வெற்றிதான்..."

"ஆனையிறவை ஏன் முற்று முழுதான வெற்றி இல்லை என்கிறாயா?"

"ஏனென்றால் மனோரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புலிகளை அரசு வென்றுள்ள போதிலும், இராணுவ ரீதியில் அது முற்றுமுழுதான வெற்றி இல்லை. அந்த முகாமை தக்க வைத்துக்கொள்வது பெரும் சிரமத்தின் மத்தியிலேயே சாத்தியம். அதோடு, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிதைக்கவும், தமது பேரினவாத மேலாதிக்கத்தை நிறுவவும் ஆனையிறவு அணிக்குப் பலன் சொற்பமானதே. ஆனால் முல்லைத்தீவு காடுகளை அழிப்பதும் குடியேற்றங்களைப் பயன்படுத்துவதும் அதன் நோக்கத்தில் மிகுந்தளவு பயன்மிக்கவை. அரசின் இராணுவ அரசியல் திட்டமிடலாளர்கள் அதையே பிரதானமானது என்று கருதுவார்கள். புலிகளைப் பொறுத்தவரை அரசின் யுத்த தந்திரத்தினை உடைக்கும் விதத்தில் அது தனது சக்திகளை குவிப்பதற்குப் பதில், அதற்கு நெருக்கடி கொடுப்பதிலேயே கவனம் செலுத்துவதால் இராணுவத்திற்கு இராணுவ அளவிலும் இங்கு முழு வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது..."

"புலிகளின் ஆனையிறவு தோல்விக்குப் பின் மக்களிடையே பெரும் வெறுப்பு பரவியிருப்பதாக சொல்லப்படுகிறது.. நீ அதைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?"

"கேள்விப்பட்டன். அரசியல் ரீதியில் திரட்டப்படாத மக்கள் ஒவ்வொரு தோல்வியின் போதும், எதிர்பார்த்த பயன் கிடைக்காததாலும், தோல்வி போரின் உக்கிரங்களை மிகைப்படுத்தி மனோரீதியில் சோர வைப்பதாலும் அதிருப்தி அடைவது இயற்கைதான்... அண்மையில் வடக்கில் அரசாங்கத்தால் நிரப்பப்படவிருந்த பதவி வெற்றிடங்களுக்கு, மாவீரர்களது குடும்பங்களிலிருந்தே ஆட்களை தெரிவு செய்ய வேணும் என்று புலிகள் அறிவித்திருப்பதும், மேலும் அதிகமாகப் பவுண் வசூல் செய்யத் தொடங்

www.tamilarangam.net

கியிருப்பதும், போரில் காயப்பட்ட வர்களை பராமரிப்பதில் உள்ள சிக்கல்தளை மக்களின் தோள் மீது சுமத்தியிருப்பதும். கொழும்பிலிருந்து போகும் நுகர்வுப் பொருட்களில் தாம் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டு << வியாபாரிகள் நட்டப்படாதிருக்க >> நியாயவிலை நிர்ணயிப்பதும் இந்த <<நியாய விலை>> (ஒரு சன்லைட் சவர்க்காரக் கட்டி 40/= ரூபா) மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவு அதிகமாக இருப்பதும், பனங்காயும், ஒடியலும், பனாட்டும் மக்களின் அன்றாட உணவாகிவிட்டிருப்பதும் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது உண்மைதான். இவைகளை மக்கள் சுமக்கமாட்டார்கள் என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. இவற்றைச் சுமப்பதற்கான காரணம் என்ன? எதற்காக நாம் போரிடுகிறோம்? என்பது போன்ற <<அரசியல்>> மக்களிடமிருந்து மறைக்கப்படுவதுதான் பிரச்சினை. தாம்படும் கஷ்டங்களுக்கு என்ன காரணம் என்பதும், தமக்குச் சம்பந்தமில்லாத ஒன்றிற்காக தாம் அவதிப்படுகிறோமா என்பதும் மக்களுக்குத் தெரியவில்லை. அதுதான் பிரச்சினை.."

"எப்பிடியோ போகிறபோக்கில் நீ சொன்ன மாதிரி உடனடியாக பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு இல்லையெண்டே தெரியுது, பிரேமதாச மீதான இம்பீச்மென்ற் அந்த வாய்ப்பை உடைத்துவிட்டது. அதைப் பற்றி நீ என்ன சொல்கிறாய்?"

"யூ.என்.பி.க்குள் இப்ப உருவாகியிருக்கிற பிரச்சினை பேச்சுவார்த்தைக்கான உடனடி வாய்ப்பை பின் தள்ளிவிட்டிருப்பது என்னவோ உண்மைதான். அது புலிகள் மீது இராணுவம் தனது விருப்பப்படி தாக்கி முன்னேறும் வாய்ப்பை உருவாக்கி விட்டிருப்பதும் உண்மைதான். ஆனால் அதுவும் நீண்ட நாளைக்குச் சாத்தியப்படப் போவதில்லை. திரும்பவும் பேச்சுவார்த்தைக்கான தேவை வரத்தான் போகிறது"

"ஏன்..?"

"ஒன்று பாராளுமன்றம் 24ஆம் திகதி கூடாவிட்டால் என்ன கூடினால் என்ன அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவது - அதுவும் நாடு முழுவதும் நீடிக்கப்படுவதை - எதிர்க்கட்சிகள் ஆதரிக்குமோ தெரியாது. முதன்முறையாக பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி தன்ரை பெரும்பான்மையை இழக்கலாம். சில வேளை வடக்கு, கிழக்கில் மட்டும் அவசரகாலத்தைப் பேண எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொள்ளக்கூடும்."

"ஆனால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க சாதாரண பெரும்பான்மை போதுமே?"

"போதும். ஆனால் பிரேமதாசா

www.tamilarangam.net

வுக்காக - அதாவது அரசுக்காக நிற்பதாகச் சொல்கிற 116 பேரில் எத்தினைபேர் பிரேமதாசாவுக்கு எதிராக இருக்கினம் என்று இது வரை தெரியாது. நேற்றோடு இந்த 116 பேரில் 3 பேர் விலகி அத்துலத் முதலியுடன் சேர்ந்துவிட்டார்கள். இன்னும் கனபேர் விலகலாம்... சரி அப்பிடித்தான் அவசர காலச்சட்டம் நீடிக்கப்பட்டாலும் ஜனாதிபதிக்கெதிரான <<ஒழுக்க வழுவுரைப்பு மனு>> மீதான விவாதம் நடாத்தப்படவேண்டிவரும்"

"அதென்ன ஒழுக்க வழுவுரைப்பு?"

"இம்பீச்மென்றை எப்பிடி தமிழ்ப்படுத்திறது?"

"அரசியல் குற்ற மனு என்கிறார்கள்"

"அது தமிழ் மொழிபெயர்ப்பல்ல. நமது கவிஞர் ஒருவர் சொன்னதுபோல அது முழிபெயர்ப்புத்தான். <<வழுவொழுக்குரைத்தல்>> என்று போடலாம் என்று நான் முதலில் நினைத்தேன். அதைவிட <<ஒழுக்க வழுவுரைத்தல்>> என்ற தமிழாக்கம் கூட அர்த்தபுஷ்டியுள்ளதாகப் படுகிறது.."

"வழுவொழுக்குரைத்தல் என்ட உன்ரை மொழிபெயர்ப்பை உச்சரிப்பதே கஷ்டமாக இருக்குது"

"உச்சரிக்கிறதல்ல பிரச்சினை.. <<வழுவொழுக்கு>> என்பதைவிட <<ஒழுக்க வழு>> அர்த்தத்தில் சற்று வேறுபடுகிறதல்லவா? எப்பிடியோ நாங்கள் விசயத்திற்கு வருவோம். ; இதுபற்றிய விவாதம் நடாத்தப்பட வேண்டும்.."

"ஆனால் இந்த விவாதத்தை நடாத்தாமல் பாராளுமன்றத்தை ஒத்திப்போட ஜனாதிபதிக்கு முடியும்தானே?"

"முதற் தடவை அவன் அதைச் செய்துவிட்டான். இரண்டாம் தடவை அவன் அதைச் செய்வதானால் பரவலான எதிர்ப்பையும், பல யூ..என்.பி.யினரின் விலகலையும் எதிர்நோக்க வேண்டிவரும். அதோடை மூன்றாவது தடவை நிச்சியமாக பாராளுமன்றத்திலை அவன் பெரும்பான்மையை இழப்பான்!"

"அப்பிடி இழந்தால் அநுராவை பிரதமராக்குவேன் என்று பிரேமதாச சொல்லியிருக்கிறானே?"

"அந்தப் பாராளுமன்றம் இன்னமும் வேடிக்கையாயிருக்கும். நாட்டில் ஸ்திரத்தன்மையைப் பேண முடியாமல் இருக்கும். தெற்கில் உருவாகும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வடக்கு, கிழக்கைத் தற்காலிகமாக மறக்க வேண்டியிருக்கும். மூன்றாவது முறையில் அவ

www.tamilarangam.net

சரகாலத் தடைச் சட்டம் ஆகக் குறைந்தது வடக்கு, கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் நீக்கப்படும். அப்போது பல அரசியல் கைதிகளும் - பழைய ஜே.வி.பி. உறுப்பினர் உட்பட - விடுவிக்கப்படுவர். ஜே.வி.பி. தடைசெய்யப்பட்ட நாளிலிருந்தே அதன் பிரதான கோரிக்கை ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பது. இப்போ நிலைமை மோசமாகவிருக்கும். வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு தற்காலிகமாகவேனும் ஒரு ஓய்வு கொடுக்காமல் எதையும் செய்யமுடியாது!"

"போகட்டும் விடு.. ஆனால் இந்த ஒழுக்க வழுவுரைப்பினால் உருவாகியிருக்கிற சூழல், தமிழ் மக்களுக்கு என்னத்தைத் தரப் போகிறது?"

"புதிதாக எதையும் இல்லை.."

"என்ன அப்பிடி மொட்டையாகச் சொல்கிறாய்? இது அடிப்படையில் ஜனாதிபதி முறைமைக்கு எதிரான ஒரு போராட்டமாக அல்லவா வெடித்திருக்கிறது? ஜனாதிபதி முறைக்குப் பதிலாக பாராளுமன்ற முறையை கொண்டுவர வேண்டும் என்றே விலகிய அத்துலத் முதலி, காமினி, பிரேமச்சந்திரா ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் கோருகின்றனர். இது அடிப்படையில் ஒரு அதிகாரத்துவ முறைமைக்குப் பதிலாக பாராளுமன்ற ஜனனாயக முறைமையைக் கோருவதாக உனக்குப்படவில்லையா?"

நண்பர் எனதுகேள்விக்குப் பதிலளிக்காமல் சிரித்தார். இங்குள்ள பத்திரிகைகளில் பரவலாக இது தொடர்பாக விவாதங்கள் நடந்த வண்ணம் உள்ளன. அத்துலத்முதலி கோஷ்டியினரால் முன்வைக்கப்படுவது ஒரு சனனாயகக் கோரிக்கையென்றே பரவலாக அபிப்பிராயம்



www.tamilarangam.net

நிலவுகிறது. மக்களிடையேயும் அவர்களுக்குப் பலத்த ஆதரவு இருப்பதை அவர்களது நுகேகொட, கண்டி கூட்டங்கள் தெளிவாகக் காட்டியுள்ளன. கூட்டணி தவிர்ந்த அனைத்து எதிர்க்கட்சிகளும் இதற்குச் சார்பாக தமது ஆதரவைத் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒரு தனிநபருக்கு மட்டுமீறிய அதிகாரங்களைக் குவித்துள்ளதும், பாராளுமன்றத்திற்கு இருந்த அதிகாரங்களும் இதன்படி ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதும், இது பல விதமான அதிகாரத்துவ நடவடிக்கைகட்கு வழிகோலியுள்ளதாகவும், அதிகாரத் துஷ்பிரயோகம், இலஞ்ச ஊழல் மற்றும் தனிநபர் இயல்புக்கேற்ற புத்திபூர்வமற்ற நடவடிக்கைகள் எல்லாம் நடக்க இது வாய்ப்பளித்துள்ளதாகவும் பேசப்பட்டு வருகிறது. ஆனால் இது குறித்த எனது கேள்விக்கு நண்பர் எதிரிடையாகப் பதிலளிப்பதுபோல சிரித்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஏன் சிரிக்கிறாய்..? உனக்கு அப்பிடித் தோன்றவில்லையா?" என்று கேட்டேன் நான்.

"நான் சிரிப்பது என்னுடைய அபிப்பிராயம் காரணமாக அல்ல. உனக்கு இந்தப் பாராளுமன்றம், ஜனாதிபதி அமைப்பு முறைகள் தொடர்பாக இருக்கிற பிரமைகள் காரணமாக" என்றார் நண்பர்.

"என்ன பிரமை?"

"முதல்லை, ஜனாதிபதியும் பாராளுமன்றமும் என்ன எண்டு யோசிச்சுப் பார்.. அவை இரண்டும் இலங்கையரசின் தலைமை அங்கங்கள். இலங்கையரசோ அடிப்படையிலை தமிழின விரோத சிங்கள பௌத்த பேரினவாத அரசு. அதின்ரை தலைமை அங்கங்களிலை ஒண்டு மாறி ஒண்டு வாறதாலை எங்களுக்கு - அதாவது தமிழ் மக்களுக்கு - என்ன சனனாயகம் கிடைக்கப் போகுது? இரண்டிலை எது தமிழ் மக்களை அதிகம் ஒடுக்கும் சக்தி வாய்ந்தது எண்டு வேணுமானால் நாங்கள் பேசலாம்!"

"நீ சொல்லிறது அவ்வளவு விளக்கமாயில்லை"

"சரி சொல்லுறன். அத்துலத்முதலி கும்பல் இப்ப என்ன சொல்லுது எண்டு கவனிச்சியா? புலியளுக்கு அரசாங்கம் ஆயுதங்களை - விமான எதிர்ப்பு ஆயுதங்களையும் - குடுத்து தங்கடை இளம் சிங்கள இளைஞர்களை கொல்ல விட்டிருக்குதாம்!. புலியளுக்கு ஜனாதிபதி ஆயுதம் குடுத்தார் எண்ட அத்துலத்முதலியின்ரை பிரச்சாரம் இப்ப பரவலாக அடிபடத் துடங்கியிருக்குது. இது என்னத்தைக் காட்டுது? இந்திய இராணுவத்தை

www.tamilarangam.net

வெளியேற்றுகிற காலத்திலை அரசு புலிகளோடை கொண்டிருந்த உடன்பாட்டுக் காலத்தின்போது அது குடுத்த ஆயுதங்களை இப்ப பிரேமதாசாவுக்கு எதிராக இந்தக் கோஷ்டி திருப்பிவிட்டிருப்பது, புலியளை முற்றாக அழிக்கிற இராணுவத்தின்ரை நடவடிக்கைக்கு அவைதான் தடையாக இருக்கின்றன என்டதைத்தானே? ஆக புலியளை முற்றாக அழிக்கிறதிலை இந்தக் கும்பலுக்கு வேறை அபிப்பிராயம் கிடையாது. புலியளை அழிக்கிறதிலை பிரேமதாசவின்ரை அணுகுமுறை போதாது, முட்டாள்த்தனமானது என்டதுதானே இதின்ரை அர்த்தம்.."

"சரி, அதுக்கு..?"

"என்ன அதுக்கு எண்டிறாய்? இலங்கையரசு புலியளை அழிக்கிறது சரியெண்டு நினைக்கிறாயா? புலியளை அழிக்க இலங்கையரசுக்கு உரிமை இருக்கெண்டு நினைக்கிறாயா?"

"புலியளின்ரை அநியாயத்திற்கு இந்த நிலைமை தவிர்க்கேலாதது தானே? இதிலை உரிமைப் பிரச்சினை எங்கை வருகுது.."

"நீயும் உந்தத் தமிழ்க் கட்சியளைப்போலை பேசுறாய். புலியளைப் பற்றி என்னதான் ஆயிரம் விமர்சனம் எங்களுக்கு இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை முன்வைக்காமல், அவர்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் புலிகளுக்கு எதிராக சண்டையிடுவது தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தமிடுவது தான். புலிகளை அழிப்பது தமிழ் மக்களை அழிப்பதுதான். ஆக, தமிழ் மக்களையும் அவர்களது போராட்ட உரிமையையும், போராட்டத்தையும் அழிப்பதுதான் இந்தப் புதுக் கோஷ்டியளின்ரை நோக்கம்"

"அப்ப புலியளை அழிக்காமல் அவங்களோடை கொஞ்சச் சொல்லியே சொல்லுறாய். இவ்வளவு அநியாயத்திற்குப் பிறகும், இவ்வளவு சனம் செத்தாப் பிறகும், கேசவன், செல்வி, தர்மலிங்கம்... எண்டு இன்னமும் ஆக்களைக் கடத்தினாப் பிறகும்.."

"ஒண்டோடை ஒண்டைக் குழப்பாதை. இதெல்லாம் புலியள் பற்றிய எங்கடை - தமிழ்ச் சனத்தின்ரை - பிரச்சினை. இதை எப்பிடி தீர்க்கிறது எண்டது எங்கடை பிரச்சினை. இது அரசாங்கத்தின்ரை பிரச்சினையில்லை. அரசாங்கம் தமிழ் மக்களின்ரை பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வை முன்வைக்காமல் புலிகளை அழிப்பது என்பது சாரத்தில் தமிழ் மக்களை அழிப்பது தான். இப்ப மணலாறிலை என்ன நடக்குது? தமிழ் மக்களுக்கு சொந்தமான காடுகள் எரிக்கப்படுகின்றன. 600க்கும் மேற்பட்ட தமிழர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின்ரை பாரம்பரிய பிரதேசங்கள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. எல்லாம் புலிகளின் மீதான தாக்குதல் என்ற பெயரால். அத்துலத்முதலி கோஷ்டியும் அதைத்தான் தொடரப்போகுது. அவை சொல்லுற பாராளுமன்ற ஆட்சிக் காலத்தில்தான் தனிச் சிங்களச் சட்டம் வந்தது! அடுத்தடுத்துக் கலவரங்கள் வந்தன. பயங்கரவாதத் தடைச் சட்டம் வந்தது. தமிழ் இளைஞர்களைப் பலிகொண்டது. ஏன் கனக்க. இந்த அத்துலத் முதலி இருக்கேக்கைதான் வடமாராட்சி முற்றாக அழிக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நகரம் சுடுகாடாக்கப்பட்டது. ஆயிரக் கணக்கில் தமிழ் இளைஞர்கள் பூஸாவுக்கு ஏற்றிச் செல்லப்பட்டார்கள். இதே காமினி இருக்கும்போதுதான் யாழ்ப்பாணம் நூல் நிலையம் எரிக்கப்பட்டது. அதுமட்டுமே? இந்தப் பாராளுமன்ற ஆட்சிக்குக் கீழ்தான் நான் முதல் சொன்ன திட்டமிட்ட குடியேற்றங்களும் நடத்தப்பட்டன. ஆக, இந்தப் பாராளுமன்றமுறை எந்த வித த்திலேயும் தமிழ் மக்களுக்கு சனனாயகத்தை வழங்கப் போறதில்லை. சனனாயகத்தை மட்டுமல்ல எதையுமே வழங்கப் போறதில்லை. இந்த சனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைத்து பழையபடி பாராளுமன்றத்தை கொண்டுவருவதால் புதிதாக சனனாயகம் நிறுவப்படப் போவதாக இவர்கள் சொல்வது சுத்தமான பொய்.."

"அப்ப ஜனாதிபதி ஆட்சி முறையே சிறந்தது என்கிறாயா? பிரேமதாசாவுக்காக உன்னை விடவும் திறமா ஆரும் வாதாடமாட்டினம் என்று நினைக்கிறன்" என்றேன் நான்.

"ஜனாதிபதி ஆட்சிமுறையும் அப்பிடித்தான். பாராளுமன்ற ஆட்சி முறை ஜனாதிபதி ஆட்சிமுறையை விடச் சிறப்பானது என்பது உண்மையல்ல என்றுதான் சொன்னேன். பாராளுமன்றத்தில் நடப்பது பெரும்பான்மை ஆட்சி. அங்கே ஊரையும், உலகத்தையும் பேக்காட்ட விவாதங்களும், வாக்கெடுப்பும் நடக்கும். அதிலை அங்கு அபிப்பிராயம் சொல்ல ஜனநாயகம் இருப்பதுபோலத் தெரியும். ஆனால் நடைமுறையில் ஆளும் வர்க்கங்களின் நலன்தான் பேணப்படும். பெரும்பான்மை அதிகாரம்தான் – சிறுபான்மை சரியாக இருந்தால் கூட – அங்கு இருக்கிறது. ஜனாதிபதி ஆட்சியும் அப்பிடித்தான். பெரும்பான்மையினரின் பிரதிநிதிதான் ஆட்சிக்கு வருகிறார். ஆக இந்த இரண்டுமே தமிழ் மக்களுக்கு ஒன்றுதான். ஒன்றைவிட ஒன்று சிறப்பானது என்று சொல்ல முடியாது..."

"அப்ப இரண்டுமே சரியில்லை என்டு சொல்கிறாயா?"

www.tamilarangam.net

"ஒம்.. இரண்டுமே தமிழ் மக்களுக்கு ஒன்றுதான். எது இருந்தாலும் அது பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தலைமையைத்தான் கொண்டிருக்கும். இங்கே சனனாயகம் என்பது வெறும் சுத்துமாத்துத்தான்."

"தமிழ் மக்களை விட்டிட்டு, சிங்கள மக்களை எடுத்துப் பார். அவர்களுக்கு பாராளுமன்ற ஜனனாயகம் ஒரளவாவது ஜனனாயகத்தை வழங்காதா?"

"எனக்கு அப்படிப் படவில்லை. பாராளுமன்ற அமைப்பின் கீழ் இருந்ததைவிட மேலதிகமாக எதுவும் இப்போது உருவாகிவிடவில்லை. உண்மையில் மக்கள் அரசுக்கு எதிராக இருக்கிறார்கள். அவர்களது எதிர்ப்பை இந்தப் பிரேமதாசா எதிர்ப்பு மற்றும் பாராளுமன்ற ஜனனாயகம் என்ற முழக்கங்களுக்கு சாதகமாக்கி, திரைமறைவில் தமது காரியத்தைச் – அதாவது தாம் பதவிக்கு வருவதை விரும்பும் சக்திகள் – செயற்படுத்துகிறார்கள். உண்மையில் அவர்களது நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதேயொழிய பாராளுமன்ற முறைமையை மீளக் கொணர்வதல்ல. பிரேமதாசாவின் மலினத்துவ அரசியல் தகர்க்கப்பட வேண்டுமானால் இத்தகைய சுலோகங்கள் அவசியமாக இருக்கிறது. புலிகளுக்கு ஆயுதம் கொடுத்ததாக இனவாதம் பேசவேண்டியிருக்கிறது. இது உண்மையில் ஆளும் வர்க்கக் கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள ஒருவகை அதிகாரப் போட்டியே..."

"ஆனால் லலித் கோஷ்டிதாங்களும் யூ.என்.பி.யின் கொள்கைகளையே கொண்டிருப்பதாகக் கூறுகிறார்களே.."

"அதுதான். இதே யூ.என்.பி.யின் கொள்கைகளை மிகவும் தீவிரமாக அமுல் செய்யவும் அதற்கெதிரான மக்களின் எழுச்சியை இலகுவாக நசுக்கவும் (அதாவது விவாதித்துக் காலத்தை வீணாக்காமல்) வாய்ப்பாக கொண்டுவரப்பட்டதுதான் இந்தப் புதிய ஜனாதிபதி முறைமை. அது தனது நோக்கத்தைச் சிறப்பாகவே செய்துள்ளது என்று நான் நினைக்கிறேன். அது அப்படிச் செய்யவில்லை என்று லலித் கோஷ்டியினரால் நிருபிக்க முடியுமா? ஆனால் அதை நிரூபிப்பதற்கு அவர்கள் அக்கறைப்படவில்லை. மாறாக இதை அகற்ற வேண்டும் என்கிறார்கள். மலினத்துவவாதியான (Populist) பிரேமதாசாவை நேரடியாகத் தாக்குவது ஆபத்தென்பதால் அவர்கள் ஜனாதிபதி முறைமையைத் தாக்குகிறார்கள். இது பாரம்பரிய மேலோங்கிகளுக்கும் (Elits) புதிதாக எழுந்து வந்த மேலோங்கிகளுக்குமிடையிலான சரசம். இந்த முரண்பாடு இன்னொருவகையில் தனது லும்பன்

www.tamilarangam.net

தோற்றப்புள்ளியில் இருந்து வளர்ந்து <<சட்டபூர்வ சர்வாதிகாரியாகி>>யதன் காரணமாக, மற்றவர்களை <<மேய்க்கும்>> வேலை செய்கிற பிரேமதாசாவின் வளர்ச்சிப் போக்கு எதிர்காலத்தில் பாரம்பரிய மேலோங்கிகளின் அதிகாரத்திற்கு சவாலாகிவிடும் என்ற அச்சத்தால் உருவானதென்றும் சொல்லாம். பிரேமதாசாவின் கடந்தகால சர்வாதிகாரம் ஜனசவிய மற்றும் ஹம் உதாவ பத்து இலட்சம் வீடு போன்ற மலினத்துவத் திட்டங்களின் மூலம் கோடிக்கணக்கில் காசைக் கொட்டி மூடி மறைத்தபோதும் கூட வெளியே தெரியத்தான் செய்கிறது. படுகொலைகளும், காணாமற் போதல்களும் ஒருபுறமும் புத்த கோவில்களுக்கு கையில தட்டுடன் திரிவது இன்னொரு புறமுமாக அவன் நடத்திவரும் நாடகம் இந்தக் கோஷ்டியினருக்கு - ஜே.ஆர். உட்பட - அச்சமூட்டுவதாக உள்ளதில் ஆச்சரியமில்லை. பிரேமதாசவின் பொய்மை அரசியலை அம்பலப்படுத்த வக்கற்ற இவர்கள் அதே கூடாரத்தில் இருந்தபடியே அரசியல் சட்டமாற்றம் பற்றிப் பேசுகிறார்கள்"

"ஆக நீ என்னதான் இதுபற்றிச் சொல்லப் போகிறாய்?"

"இதில் சொல்ல ஒன்றும் இல்லை. பொறுத்திருந்து பார். வெள்ளை வேட்டிக் கள்ளருக்கும், நீவெட்டிக் கள்ளருக்கும் இடையில் நடக்கும் <<முறைமை>> பற்றிய பிரச்சினை இது. இதிலை ஜனநாயகம் அது இதெண்டு கத்திறதெல்லாம் சுத்தமான பசப்பல்தான்"

"ஜனாதிபதியைப் பாராளுமன்றம் இப்படி ஆட்டிவைக்க முடியும் எண்டது இப்பதானே விளங்குது. இதுவரை இது சாத்தியம் எண்டே ஒருதருக்கும் தெரிஞ்சிருக்கேல்லை"

"அது சரிதான். ஆனால் இப்படி நடந்ததுக்குக் காரணமே ஜனாதிபதியின் அதிகாரத்துவத்தின் அத்துமீறல். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியில் ஆளையே கடித்தது போல பிரேமதாசா மந்திரிகள், எம்.பி.க்கள் எல்லாற்றை அதிகாரங்களையும், பதவியளையும் பறிச்சிட்டான். இரண்டாம் மட்டமே இல்லாத ஒரு தலைமையை நிறுவினான். இதெல்லாம் இவ்வளவு காலமும் இந்தப் பதவிகளை வைத்துக்கொண்டு <<அனுபவிச்சவர்களுக்கு>> சகிக்க முடியாத ஒன்றாகிப் போய்விட்டது. எம்.பி.க்களையும், மந்திரிமாரையும் தனது வேலையாட்கள் போல அவன் நடத்தினான். தனது விசுவாசிகளுக்குப் பதவியைக் கொடுத்துவிட்டு அவற்றின் அதிகாரங்களைத் தானே பறித்து வைத்துக் கொண்டான். இதெல்லாம் பெரிய பிரச்சினையாகிவிட்டது. இத்தகைய நிலை ஒருபோதும் வந்தி

www.tamilarangam.net

ராது. தனது இருப்புக் குறித்து அவனுக்குச் சதா இருந்த அச்சம் காரணமாக எல்லோரையும் சந்தேகித்ததால் எவரையும் நம்பாமல் எல்லோரையும் அதிகாரமற்றவர்களாக்கியதால் அவர்கள் இவனை அதிகாரமற்றவனாக்க முனைந்தார்கள். இது இயற்கைதானே.. இப்படி ஒரு மந்திரி சபையும், எம்.பி.க்களும் பொதுவாக எப்போதும் வருவதில்லை. பார்ப்போம். கொஞ்சம் பொறுத்தால் எல்லாம் தெளிவாகும்."

"ஆனால் பிரேமதாசாவிடம் பெரிய குண்டர்படை இருப்பதால் வேறு பிரச்சினைகள் வரலாமில்லையா?"

"வரலாம்தான். ஆனால் அதே வேளை லலித் கோஷ்டிக்கும் அப்படிப்பட்ட குண்டர்படைகள் உண்டு. அதுதான் நிலமை அடங்காமல் வளர்கிறது. ஒன்றுமட்டும் நிச்சயம். இதனால் வரப்போவது ஜனநாயகமோ வேறெந்த மண்ணாங்கட்டியுமோ அல்ல. வெறும் கோஷ்டி மோதலும், குழிபறிப்பும், அழிவும்தான்... பார்ப்போம்...!"

* * * * * * * * * * * * * *

ஊரிலிருந்து வந்த நண்பர் ஒருவரை திடீரென்று சந்தித்தேன். சற்றும் எதிர்பாராத சந்திப்பு. அவர் புலிகளிடம் அனுமதி பெற்று இங்கு வந்து சேருவார் என்ற நம்பிக்கை எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை. அதுவும் கேசவன் உட்பட தீப்பொறியைச் சேர்ந்தவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட பின்னாலும் கூட இவர் வந்து சேர முடியும் என்பது சந்தேகமாக இருந்தது. ஆனால் அவர் வந்துவிட்டிருந்தார்!.

"எப்பிடி வந்தீர்..?"

"களவாகத்தான். பாசும் இல்லாமல் ஒளித்துத்தான்"





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எப்பிடி..? அவங்களிட்டை பிடிபடேல்லையே?"

"பிடிபட்டிருந்தால் இப்ப உன்னோடை நின்டு கதைச்சுக்கொண்டிருக்க முடியுமே.. ஒழிச்சு பதுங்கிப் பதுங்கி ஒருமாதிரி வந்திட்டன். விடு கதையை. இப்ப அதைவிட எனக்குப் பெரிய பிரச்சினாய் இருக்கு இஞ்ச"

"என்ன..?"

"எங்கை தங்கிறதெண்ட பிரச்சினை. சாப்பாட்டுக்கு என்ன செய்யறிதெண்ட பிரச்சினை. ஏதோ அங்கை இருக்க முடியாமல் ஓடியந்தன். இஞ்சை என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை."

இதற்கு ஒரு பதிலும் என்னால் சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு பொலிஸிலும் பெயர் பதியவேணும் என்கிற சட்டம் வந்தபின் எங்கேயும் இலகுவில் தங்க முடியவில்லை. லொட்ஜ் களில் தங்குவதும் சிக்கலாக இருந்தது. என்னுடைய வீட்டுக்கோ நினைத்துப் பார்க்க முடியாது. இவரைக் கூட்டிப் போனால் சிலவேளை நானும் றோட்டில் நிற்கவேண்டிவரலாம்...

"இப்ப எங்கை தங்கியிருக்கிறீர்?"

"லொட்ஜ்ஒண்டிலை. ஒருநாளைக்கு நூறு ரூபா குடுக்கிறன்"

"ஐயோ!"

"என்ன ஐயோ என்னிறாய். அங்கை நூறு ரூபாவிலை ஒரு சவுக்காரமும், காப் போத்தல் மண்ணெண்ணையும் கூட வாங்கேலாது. அது ஒரு காசே என்ன? எனக்குப் பிரச்சினை காசுக்கு என்ன செய்யிறதெண்டுதான்.."

"உன்ரை பிளான் என்ன?"

"எனக்குத் தெரியாது!. பிளான் பண்ண ஏதாவது இருக்க வேணுமே'

"சிங்களம் தெரியுமே?"

நண்பர் பலத்துச் சிரித்தார். "எனக்குத் தெரிந்தது தமிழ் ஒண்டுதான். அதுகும் சரியாத் தெரியாதெண்டு நீ சொல்லுறனீ. சிங்களம் தெரியுமோவெண்டால்... ஏன் கேக்கிறாய்?"

"ஏதாவது வேலை செய்யலாமோவெண்டுதான்"

"என்ன வேலை செய்ய? எனக்குத் தெரிஞ்ச வேலையெண்டு ஒண்டும் இல்லை. புலியளை விமர்சிக்கிற, மக்களின்ரை கஷ்டத்தைப் பற்றி விளங்கப்படுத்துகிற அல்லாட்டில் அரசியல் பத்திரிகை வாசிக்கிற மாதிரி வேலை இஞ்ச இருக்குதா என்ன?"

www.tamilarangam.net

நான் மௌனமாய் நின்றேன். பதில் தெரியவில்லை. இதற்கு என்ன சொல்வது.

"ஊரிலை என்டால் என்ன செய்யிறனீ?"

"வீட்டுக்கை ஒளிச்சு இருந்தனான். இடைக்கிடை அப்பருக்குத் தோட்டத்திலை தண்ணி மாறிக் குடுத்திருக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு வேலை வடிவாய்த் தெரியும்"

"என்னது?"

"சொன்னாச் சிரிக்காதை. எனக்கு நல்லாத் தெரிஞ்சது அது ஒண்டுதான். காம்பிலை அதுக்கும் ரெயினிங் எடுத்தனான்"

"என்னது?"

"முடி வெட்டத் தெரியும்..."

"ஆனால் உன்னை நம்பி எந்தச் சலூன்காறன் சேர்க்கப் போறான். சிங்களம் வேறை தெரியாதெண்டுறாய். பார்ப்பம். வாவன்" என்று கூறி அவரை ஒரு கடைக்கு அழைத்துப் போனேன்.

தேநீரை உறிஞ்சியபடி அவர் பேசிக்கொண்டிருந்தார். நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"இப்ப சனங்கள் முந்தி மாதிரி இல்லை. நிலைமை வரவர மோசமாகிக்கொண்டு வருகுது. இப்ப நிவாரண உதவியும் நிப்பாட்டிப் போட்டாங்கள். சாப்பாட்டுக்கே பெரிய கஷ்டமாயிருக்குது. ஆனால் புலியள் வீடுவீடாய் வந்து சாப்பாடு தா, மலிபன் விசுக்கோத்து தா எண்டு நிர்ப்பந்திக்கிறாங்கள். 2 பெட்டி மலிபன் விசுக்கோத்துக்கு 700 ருபா முடியுது"

"என்ன...??"

"ஓம். எழுநூறு ருபா. ஏழு நூறு ருபாய்கள். நீ என்ன நினைச்சாய். இஞ்சை மாதிரி முப்பது ருபாவுக்கு வாங்கலாம் எண்டே. சாம்பலும், பனங்காயும் உடுப்பு தோய்க்கப் பாவிபடுது. சைக்கிள் டைனமோவிலை அங்கிளை நியூஸ் கேட்டால்தான் எங்கடை கிராமத்துக்கு அங்காலையும் ஒரு உலகம் இருக்கிறது நினைவு வரும். இப்ப திலீபன்ரை ஞாபகத்துக்கு விழாக் கொண்டாடப் போறாங்கள். அதுக்கு அலுவல் நடக்குது தடல்புடலாக. வடமாராட்சிப் பக்கத்திலை திரும்ப 5 பவுண் கேக்கத் தொடங்கியிட்டாங்கள். எல்லாத்தையும் வறுகி எடுக்கிறாங்கள் எண்டு சனம் திட்டத் தொடங்கியிட்டுது. ஊரூராய்ப் பிரச்சாரம் செய்து ஆக்களை எடுக்கிறாங்கள். குறைந்த வயதெல்லை இப்ப 12இலயிருந்து 10 ஆகியிட்டுது. உனக்குத் தெரியுமே இப்பவும் கனபேரைப் பிடிச்சுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு போறாங்கள். பிடிச்சவங்களை விடவேயில்லை. திரும்பவும் கம்பஸிலை 2 பேரைப் பிடிச்சிருக்கிறாங்கள். அதிலை ஒண்டு வவுனியாவைச் சேர்ந்த ஒரு பிள்ளையாம். செல்வி என்டு சொல்லுறாங்கள். உனக்குத் தெரியுமே?"

"கேள்விப்பட்டனான் சொல்லு."

"இது மட்டுமே. சாமானுகளை கட்டுப்பாட்டு விலை போட்டு இவங்களே விக்கச் சொல்லுறாங்கள். ஆனையிறவு தோல்விக்குப் பிறகு ஒரு கதையும் இல்லை. திரும்ப முல்லைத்தீவிலை சண்டை நடக்குது. அங்கை இருக்கிறதுக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை. என்னைப் பொறுத்தளவிலை சும்மா பழக்க தோஷத்திற்காக வாழ்ந்துகொண்டிருக்கிற மாதிரி இருந்தது. கனக்க நாடகங்கள் போடுறாங்கள்."

"ஆர் போடுகினம்?"

"ஒண்டு சிதம்பரநாதன். வேறையும் அங்கினைக்கங்கினை. ஆனாலும் ஆர் என்ன செய்யிறதெண்டாலும் புலியளிட்டை பெமிசன் எடுக்கோணும். பஸ் அவங்கள்தான் ஒழுங்கு பண்ணி அனுப்புறாங்கள். ஒராளுக்கு எழுநூறு ரூபா. கொஞ்சம் பறவாயில்லை. புலிப் பாட்டுக்கள் நிறைய வந்திருக்கு. அதைக் கேட்டுக் கேட்டு எனக்கு உணர்ச்சி வாறதுக்குப் பதில் மனநோய் வந்திடும் போல இருந்தது. அதைவிட வேறை பாட்டுக் கிடையாது. சனமெல்லாம் சைக்கிளிலை திரியத் துடங்கியிட்டுதுகள். கொப்பி, மட்டையளிலை பேப்பர் வருகுது. அதை ஆரும் படிக்கிறேல்லை. சும்மா தந்தால்கூட நான் படிக்க மாட்டேன். புலியளின்ரை அரசாங்கம் நல்லா ஒழுங்கா நடக்குது!. சனத்திட்டைக் காசு புடுங்க இதைவிடச் சிறப்பான ஒரு அமைப்பு வேறை இருக்க முடியாது...."

தேநீர் குடித்து முடிந்தபோது அவரிடம் கேட்டேன். "சிலவுக்கு ஏதும் தேவையா?"

"இப்ப வேண்டாம். தேவையெண்டால் கேக்கிறன். ஆனால் என்னைப்போலை கன சனம் இப்ப வந்து றோட்டிலை நிக்குது. இதுக்கு என்ன செய்யப் போறம் நாங்கள்? புலியள் இஞ்சயும் தேடி வர மாட்டாங்கள் எண்டில்லை."

"கனக்கப் பயப்பிடுறாய்" என்றேன் நான்.

"உனக்கு விசயம் விளங்கேல்லை. அவங்கள் வந்து ரெண்டு மூண்டு பேரைப் போட்டாப் பிறகுதான் உனக்கு விளங்கும்"

"சரி, அரசாங்கத்தோடை சேர்ந்து மற்ற இயக்கங்கள் அடிபடுறதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கை என்ன கதைக்கினம் உதைப் பற்றி?"

"இதைப் புலியும் செய்தது தானே... தின்ன வழியில்லாமல் இருக்கிற சனத்திற்கு உதைப் பற்றிக் கதைக்க எங்கை நேரம். அங்கை இப்ப இருக்கிற நிலைமை எதைப் பற்றியும் நினைக்கிற நிலைமையில்லை. சனம் சிந்திக்கிறதைப் புலி தடுத்திட்டுது. சனத்துக்காகப் புலியே சிந்திக்குது. முடிவெடுக்குது. செயற்படுகுது. ஆனால் பாவம் விளைவுகள்தான் சனத்தைப் பாதிக்குது"

"அப்ப புலிக்கு ஆதரவு குறைஞ்சிட்டுது என்கிறாய்..!" என்னுடைய வழமையான கேள்வியை கேட்டு வைத்தேன்.

"புலிக்கு ஆதரவு இருந்ததே குறையிறதுக்கு? புலி சனத்தை மிரட்டி வைச்சிருக்குது. சனம் தவிர்க்க முடியாமல் புலியோடை நிக்குது. புகழ் பெற்ற முற்போக்குக் கவிஞர் முருகையன் இப்ப புலியளுக்காக கவியரங்கு செய்யிறார். கடைசிவரை தமிழீழத்தை நக்கலடிச்சவர் அவர். என்ன செய்ய? நிலைமை அப்பிடி! அங்கை ஆட்சி செலுத்துறது துவக்கும் குண்டுதான். ஆளுறது புலி. மனிசற்றை அபிப்பிராயம் ஆருக்குத் தேவை? மனிசருக்கு அபிப்பிராயம் ஏதாவது இருக்க முடியுாமண்டால் அது ஒண்டே ஒண்டில்தான்!"

"என்னது?"

"சாகிறது நல்லதா இருக்கிறது நல்லதா எண்டு தீர்மானிக்கிறதிலை!"

நான் என்ன சொல்ல இதற்கு மேல்? இவ்வளவும் எமது <<வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்திற்கு சமர்ப்பணம்>> என்று சொல்லவா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?



www.tamilarangam.net



# அகதிக் கொலைவெறி..

இந் நாட்களில் அகதிகளின் இரத்தங்கள் அபிஷேஷிக்கப்படுகின்றன. குளிர் தோய்ந்த பூமிக்கு மீண்டும் குருதிக் குளியல். ஒரு கதிரவனைத் தின்ற மாலைப்பொழுது.

சார்லாண்ட் (Saarland) மாநிலத்தின் சார்லூயில் நகரில் வழக்கம்போல வர்ண வர்ண வீதி விளக்கு, வீதிக்கு வீதி விபச்சாரம், விர்ரென்று விரையும் கார்கள். இவற்றிற்கு நடுவே ஒரு வெளிநாட்டகதியின் வீட்டிற்கு இலக்குப் பார்த்து வெடிகுண்டு வீசி மகிழ்ந்தனர் உள்ளூர் இனவெறியர்கள். ஆபிரிக்கக் கண்டத்தின் கானாவிலிருந்து அரசியல் நெருக்கடியில் இந்தப் பாழும் உயிரைப் பத்திரப் படுத்திவிடுவோம் என்றெண்ணிய அந்த ஏழை ஆபிரிக்கர்களை ஜேர்மானிய இனவெறியர்கள் தீயில் சுட்டெரித்தார்கள். தஞ்சப் பணத்தில் உண்டு உறங்கிய அந்த அகதியின் உடல் கருகிப்போய் இனவெறியரின் நெருப்பில் வெந்து போனது. நிர்க்கதியாக்கப்பட்டு, நிராயுதபாணியாக வந்து சரண் புகுந்த ஏழை அகதியைக் கொன்றுவிட்ட மகிழ்ச்சியில் இவ் வெறியர்கள் விஸ்கி குடித்து மகிழ்ந்தோ, வாணவேடிக்கை செய்தோ, அழகிய மாதுக்களோடு நடனம் புரிந்தோ கொண்டாடியிருப்பர்கள்.

ஹிட்லரின் காலத்தில் இரத்தம் பருகிய ஜேமானியத் தெருக்கள் மறுபடியும் இரத்தம் குடிக்கத் தொடங்கிவிட்டன. ஹிட்லர் ஆட்சியில் லாகர்(Lagar)களுக்குள் ஆடு, மாடுகளைப்போல் யூதர்களை அடைத்து விஷவாயுக்களை நுகரச் செய்து கொன்ற காட்சி மறையுமுன்னால் இன்று வெளிநாட்டவரின் லாகர்களுக்கு குண்டு வீசிக் கொண்டிருக்கிறார்கள் இந்த இரத்த வெறியர்கள். விஷவாயுக் குண்டுகளும், கத்

www.tamilarangam.net

திகளும், பொல்லுகளும், வெடிகுண்டுகளுமாய் ஆயுதமற்ற அகதிகளைத் தாக்க இரத்தப் பேய்கள் நாடளவிய ரீதியில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

சார்புறுக்கள் புகையிரதப் பாதையில் ஒரு இலங்கை நாட்டவனைக் கிடத்தி அவன் மீது புகையிரதம் ஓடியதில் காலைத் துண்டிக்க வைத்து தங்கள் வீரப் பிரதாபத்தை வெளியிட்டுள்ள இந்த வெறியர்கள் அகதிகளை எந்த நிமிடமும் எதுவும் செய்யலாம் என்ற நிலைமையை நிரூபித்துள்ளார்கள்.

உயிரை மட்டும் காப்பாற்றி விடுவோம் என்று உயிரைக் கையிற் பிடித்த அகதிகளைக் கொன்று குவிக்கிறது இக் கொலை வெறிக் கூட்டம். கையேந்தி வந்தவர்களைக் கொன்றுவிட்டோம், கொழுத்திவிட்டோம், வெட்டி விட்டோம் என்று மகிழும் இந்த ஏழை இரத்தம் உண்பவர்கள்தான் உலகத்திலேயே மிக வெட்கித் தலை குனிய வேண்டியவர்கள்.

தொலைக்காட்சிகள் இறந்தவர்களின் எண்ணிக்கையை எண்ணிக் கொண்டிருக்கின்றன. பொலிஸார் கருதிக் குளியலை போட்டோ பிடிக்கின்றார்கள். பத்திரிகைகள் கொட்டையெழுத்துகளில் கொலைகளையும், தாக்குதல்களையும் வர்ணனைகள் செய்கின்றன. பாராளுமன்றக் கூட்டத் தொடர்கள் தொடர்கின்றன. வானொலி வசனம் பேசுகிறது. இதுவரை எந்த ஜேர்மானிய வெறியனும் கைது செய்யப்படவில்லை. மாறாக இவற்றை ஒரு விளம்பரமாக்கி மீதமுள்ள வெள்ளையரும் அயலிலுள்ள அநாதைகளைத் தாக்கி வீரவிழாக் கொண்டாட்டும்.

இன்று தெருக்களில் எந்த வெளிநாட்டவரும் இல்லை. தங்கள் அறைக்குள் அடைந்து கிடக்கின்ற இவர்கள் எந்த நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கியவண்ணமுள்ளனர். ஒரு இயந்திரத் துப்பாக்கியின் சடசடப்போ, 'டமால்' என்ற வெடிகுண்டின் பேரோசைக்காகவோ அவர்கள் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டுள்ளனர்.

தங்கள் பெயர்களை வீட்டுக் கதவுகளிலிருந்து கிழித்தெறிந்தும், தங்கள் பாடல் கசற்றுக்களை போடாமலும், குழந்தைகளின் மழலையைக்கூட வாயைப் பொத்தி நிறுத்தி, தற்காப்புத்தேடி விழித்துக் கொண்டிருக்கும் இந்த ஏழைமக்களின் விடிவு? எதிர்காலத்தில் இவர்களுக்கான தீர்வு? தங்கள் பாதுகாப்பிற்கு நிலவறைகள் கட்டி வைத்துவிட்டு இந்த ஏழை அகதிகளை அநியாயமாக கொன்று குவிக்கும் இம் மிருக வெறிக்கு எப்போ முடிவு?

www.tamilarangam.net

நேற்றைப் பொழுது
வெறுமையின்
நிழல்கள் !

நாளையப் புலர்வில்
நம்பிக்கையில்லை !!

இந்தக் கணம்...
இந்தக்கணமே...
நிச்சயமானது !

என்னுடன்
பேச விரும்புவதைப் பேசு.
இன்னமும், வாழப்போகும்
நிமிடத்திற்குள் - நான்
எல்லாவற்றையும்
சொல்லத் துடிக்கிறேன்.

நான் கல்லறைக்குள்
மௌனமாய்ப் புதைந்து
போக முடியாது.

அகதியாய்...
தூக்கிய கைகளையும்
துயர மூச்சையும் _ நான்
நம்பிக்கையோடு
அடமானிட்டேன்.

வேலி
பயிர் மேய்ந்தது!
யேசுவின் நெற்றிக்கு
மேலுமோர் ஆணி!!

ஈ மொய்க்கும்
நாகரிகத்துள்
ஒன்றாய்.. இரண்டாய்..
ஆயிரமாய்ச் சிந்திய
இரத்த லீற்றர்கள்.

கக்கூஸைக் கழுவிய
ஆபிரிக்கர்
தெருவைத் திருத்திய
அராபியர்
மரத்தைப் பிளந்த
ஈழத்தகதிகள்.

வரம்பில்லாத _ உன்
அரசியலுக்கு _ இவர்கள்
உடல்களினால்
பாத்திகட்டு.

இறுதியாய்
உங்கள் _ 'கின்னஸ்'
ஜனநாயகப் போர்வையில்
அகதிகள் உயிர் உண்ணும்
தேசியத் தாயே !
அகதிகளின் இரத்த ஆற்றில்
மின்சாரம் பெறலாமா
என்று பார்.

*

ஈழத்து ராஜி

---

முன்னட்டை:
ஜீவன்

---

www.tamilarangam.net

# சட்டங்களும் சண்டியர்களும்!

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப் பட்ட அகதிகள் எல்லோரையும் விரட்டவேண்டும் என்று ஜேர்ம னிய அரசினால் யூலை மாதத்தில் செய்யப்பட்ட அறிவிப்பு இதற்கெதி ரான போராட்டங்களால் வாபஸ் வாங்கப்பட்டு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் அக திகளை விரட்ட வேண்டும் என்ற கோஷத்தை நிறுத்தாமல் பாராளு மன்ற விவாதங்களிலும், பொதுக் கூட்டங்களிலும், வானொலி, தொலைக்காட்சிகளிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் தொடர்ந்து எழு ப்பி வருகின்றன ஆளும் கட்சியும், பெரும்பாலான எதிர்க்கட்சிகளும்.

இதற்கேற்பவே அரசினால் தெரிவிக்கப்படும் பொய்க் காரணங் களை இன்னும் பலமானதாக்கி பொதுசனங்களிடம் பரப்பும் முயற் சியில் அனைத்துப் பொதுசனத் தொடர்புச் சாதனங்களும் கேவல மான பிரச்சாரம் செய்து மூன்றாம் உலகநாட்டு அகதிகளையம், தொழி லாளர்களையும் இழிவுபடுத்தி வரு கின்றன.

அகதிகளையும், கூலித் தொழிலு க்கு அழைக்கப்பட்ட தொழிலாளர் களையும் ஒடுக்குவதற்காகவும், நாடுகடத்து வதற்காகவும் அதிகார வர்க்கம் கையாண்ட இவ் வழி முறைகள் அமுங்கிக் கிடந்த நாஸி ஸத்தைத் தட்டியெழுப்பி பாதை போட்டுக் கொடுத்துள்ளன. இப் பாதையில் வீறுநடை போட்டுவரும் இனவெறிப் பாஸிஸம் அகதிகளை உயிருடன் தீ மூட்டிக் கொல்வது வரை முன்னேறியுள்ளது. இவ்வருட ஆரம்பத்திலிருந்து இம் மாத நடுப் பகுதிவரை மட்டும் சுமார் 500க் கும் அதிகமான தாக்குதல்கள் அக திகளுக்கெதிராக மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சின்னக் குழந்தை களிலிருந்து பலர் எரிக்கப்பட்டுள் ளார்கள். சட்டங்களால் சாதிக்க முடியாமல் போனவற்றை அரசு சண்டியர்கள் மூலம் சாதிக்க முயல் கிறது.

எங்கள் மக்களுக்கெதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்க மாட் டோம் என்று பொலிஸ் கூறுகிறது. அதோடு மட்டும் நின்றுவிடாது இனவெறியர்களுக்குத் தகுந்த பாது காப்பளிப்பதுடன், இவற்றை எதிர் க்கும் - அகதிகளுக்கு உதவும் - பாஸிஸ எதிர்ப்பு, மனித உரிமைக் குழுக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கின்றது.

ஜேர்மன் குடிமக்களில் அரைப் பகுதியிலருக்கு மேல் அகதிகள்

www.tamilarangam.net

மீதான புதிய நாஸிகளின் தாக்குதல்களுக்கு ஆதரவளிப்பதாகப் பத்திரிகைக் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன. ஹோயெஸ்வேட என்ற நகரில் அகதிகளை முகாமுக்குள் வைத்து தீ மூட்டிக் கொன்ற போது இனவெறிக் குண்டர்களுக்கு அப் பகுதி மக்கள் பியரும், ஷூஸ்றும் கொடுத்து உற்சாகப்படுத்திய சம்பவம் இக் கணக்கெடுப்பைச் சரியானதென நிரூபித்துள்ளது. (ரெலோ இயக்கப் போராளிகளை புலிகள் வீதி வீதியாகச் சுட்டுக் கொலை செய்த வெறியாட்டத்தின் போது அவர்களுக்கு யாழ் மக்கள் கோழியும், கோலாவும் கொடுத்ததை நினைவு கூருவது தவிர்க்க முடியாததே.)

இந்த நிலையில் அந்நிய நாடொன்றில் எங்கள் இருப்பு எப்படி பாதுகாக்கப்பட முடியும்? காறி துப்புதல், திட்டுதல், புறக்கணித்தல், இழிவுபடுத்துதல் போன்ற இன-நிறவெறித் துவேஷங்களால் உள ரீதியாகக் கொலை செய்யப்பட்டு வரும் நாங்கள் தற்போது உயிர் பறிக்கும் நாஸிஸத்திலிருந்து எப்படி எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோம்? எமக்கான சுயபாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வைத்துக்கொள்வது மட்டும் போதுமானதா?

இங்குள்ள பாஸிஸ எதிர்ப்புக் குழு, ஏகாதிபத்திய-முதலாளித்துவ எதிர்ப்புக்குழுக்களுடன் எமது செயற்பாடுகளை இணைத்துக் கொள்வதற்குப் பதிலாக டொச் மார்க்குடன் மட்டும் எமது வாழ்வைப் பிணைத்திருப்பதன் விளைவு இன்றைய நிலையில் அந்நிய நாட்டில் முற்றிலும் அந்நியமாகி, கையறுநிலையில் பலியாகும் நிலைக்கே எம்மைக் கொண்டுசெல்லும்.

இலங்கையைவிட்டு வெளியேறியதும் "பிரச்சினைகளிலிருந்து" தப்பிவிட்டதாக நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் பிரச்சினைகள் வேறுபட்ட வடிவங்களில் எங்களைத் துரத்தி அழிப்பதே உண்மை நிலையாகும்.

தப்புவது என்பது தம்காலிகமானதேயொழிய எப்போதுமே சாத்தியமானதும், நிரந்தரமானதுமல்ல. எனவே இன்று முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் இன-நிறவெறிப் பாஸிஸத்திலிருந்து தப்ப முன்றாவது நாட்டைத் தேடுவதைவிட நாம் நிரந்தரமாகவே சம உரிமைகளுடன் வாழக்கூடிய நிலைமையை உருவாக்கும் வழிவகைகளைத் தேடுவதே சரியானதாயிருக்கும்.

இன்று இலங்கை இனவாத அரசு போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் மூலம் நேரடி யுத்தத்தை தமிழ்மக்கள் மீது மிகவும் உக்கிரமானமுறையில் கட்டவிழ்த்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

துவிட்டுள்ளது. இத்தனைநாள் துன்பங்களுடனும் ஏதோ ஒரு நம் பிக்கையுடன் சொந்த மண்ணிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் இலவாத அரசினால் கொன்றொழி க்கப்படுவதை தடுப்பதற்கான நட வடிக்கைகளிலிருந்து நாம் விலகிக் கொள்ள முடியாது.

தற்போது நாம் தங்கியிருக்கும் நாடுகளில் கிளர்ந்துவரும் பாஸிஸ த்தை முறியடிக்க இங்குள்ள போரா ட்டக்குழுக்களுடன் இணைந்து செய ற்படும் அதேநேரம் இன்று மக்கள் அழிவை மட்டுமே ஏற்படுத்திக் கொண்டிருக்கும் யுத்தம் நிறுத்தப் படுவதற்கான முயற்சிகளுக்கு ஆத ரவளிப்பதுடன் நாம் மீண்டும் எமது மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற் கான போராட்டங்களிலும், மனித உரிமைகளை காப்பாற்றுவதற்கான போராட்டங்களிலும் எங்களது பங் களிப்பைத் தீர்மானித்துச் செயற்படு வது அவசியம்.



## பின்னட்டை அறிவித்தல்:

*கலம் 28இல் பிரசுரமான "ஒரு திறந்த 1990" என்ற கட்டுரையில், மேற்கு பேர்லின் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தம்மிடம் கூறிய தாக கட்டுரையாளர் கரன் எழுதிய திலிருந்து.*

# தூண்டில்

ஒக்ரோபர் 1991
கலம்: 46

ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி: (0231) 136633
<புதன்கிழமைகளில்
14-20 மணிவரை>

சந்தா

| | | |
|---|---|---|
| ஜேர்மனி | : 6 மாதங்கள் | = 20,- D.M |
| | 1 வருடம் | = 35,- D.M |
| ஐரோப்பா | : 6 மாதங்கள் | = 25,- D.M |
| | 1 வருடம் | = 45,- D.M |
| அமெரிக்கா, | | |
| ஆபிரிக்கா , | | |
| ஆசியா | : 1 வருடம் | = 65,- D.M |
| அவுஸ்ரேலியா | : 1 வருடம் | = 75,- D.M |

தபாற்கணக்கு இல: 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவி வில் ஒன்றாக் உங்கள் சந்தா நிதியை அனுப்பிவைத்ததும் எம க்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்க ளுடன் எங்களுடையதும், உங்களு டையதுமான முயற்சிகளைப் பய னுள்ளதாக்குவோம்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

ஜேர்மனியில் பாஸிஸம் சமுதாயத்தின் ஒரு மட்டத்தின் கீழ் இருப்பதால் அது எந் நிலையிலும் வெளிவரும். வளர்ந்துவரும் பாஸிஸமும், பாராளுமன்றத்தில் அதிகரித்து வரும் நாஸிக்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஆபத்தையும், பயங்கரத்தையும் உருவாக்கும்.